குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 35 | நள - புரட்டாசி - 10—10—76 | இதழ் 11

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. - சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## அறநிலையங்களின் உடைமையும் - குடிகளின் கடமையும்

### பழம்பெரும் பண்பாடு :

நமது பாரதப்பண்பாட்டில் - சிறப்பாகத் தமிழகத்தின் பழம் பெரும் பண்பாட்டில் மக்கள் கோவிலைத் தழுவிய குடிகளாக வாழ்ந்தனர். கோவிலை மையமாகவைத்து நகரங்களையும் கிராமங்களையும், அமைத்துக் கொண்டு வாழ்ந்திருந்தனர். இதனால் அந்தந்த ஊரிலுள்ள மக்கள் காலை எழுந்தது முதல் இரவுவரை ஆங்காங்கும் உள்ள ஆலயங்களில் நடைபெறும் நித்திய நைமித்திக வழிபாடுகளுக்குத் தாங்களாகவே போக இயலாதிருந்தாலும் ஊர் நடுவில் இருந்த அந்த ஆலயத்தி லிருந்து எழும் மணியோசையும் பிறவும் இவர்களுக்கு அங்கு

நடைபெறும் ஆராதனைகளை நினைவுறுத்திவந்தன. நாள் முழுவதும் அவர்கள் சிந்தனை நற்சிந்தனையாகவே அமைய வழி வகுத்தார்கள் நம் முன்னோர்கள்.

## வாழ்வோடு இயைந்த வழிபாட்டுமுறை :

எதைச்செய்ய முயன்றாலும் இறை வழிபாடு செய்தே தொடங்கும் வாழ்க்கை முறைகளையும் அமைத்துக் கொண்டிருந்தனர். இந்தச் சீரான அமைப்பினாலேயே உலகில் பல இடங்களிலும் நிகழ்ந்து வரும் பேரழிவுகள் எதுவும் நிகழ்ந்துவிடாமல் இறையருள் முன்னின்று நம்மைக் காத்து வருகிறது. அதைப்போலவே வெளியுலகில் விளையும் மாற்சரியங்களும் வீண் போட்டியும், பொறாமையும் நம்நாட்டில் பெருகி வளராமல் தடுக்கப்பட்டிருக்கின்றன. இவ்விதமாக நமது மக்களின் உள்ளப் பண்பாட்டுச் சீரமைப்புக்கு உதவிவருகிறது இந்தச் சூழ்நிலை. நமது நாட்டிலுள்ள தீவிரமான தெய்வ எதிர்ப்புக் கொள்கையுடையவர்களும்கூட தமக்குப் பெருந்தீங்குகள் நிகழும்போது தம்மையறியாமலேயே "அட கடவுளே" என்று புலம்புகின்றனர். இது எவ்விதம் நிகழ்கிறது. அவர் தம் உள்ளத்தில் ஊறி இருக்கும் அந்தப்பண்பு அவரையறியாமலேயே வெளிவருகிறது. அதாவது அவனுக்கு ஊட்டப்பட்டுள்ள தாய்ப்பாலிலிருந்துவரும் வெளிப்பாடாக இதனைக்கொள்ளவேண்டும்.

## அனுபவ முதிர்ச்சியில் மூர்த்தி பேதங்கள் :

இவ்விதமாக நாம்மறந்தாலும் நம் உள்ளம் மறவாத கடவுள் கொள்கையை வளர்க்கவும் ஊட்டவுமே நம்முன்னோர்கள் மேலே சொல்லிய வண்ணம் ஊர்களையும், கோவில்களையும் அமைத்துள்ளனர். அக் கோவில்களில் மூர்த்தி பேதங்களான அமைப்புக்களையும் அவரவர் பக்குவத்திற்கு ஏற்ப முன்னேறுவதற்கு வசதியாக, தாம் பயின்று கண்ட நல்லனுபவத்தின் வெளிப்பாடாக அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள்.

## வழிகாட்டியருளும் வள்ளல்கள் :

"தொட்டுக்காட்டாத வித்தை சுட்டுப்போட்டாலும் வராது" என்பதாக ஒரு பழமொழி நம்முள் பரவலாகப் பேசப்பட்டு வருகிறது. உலகியல் கல்வியையெடுத்துக்கொண்டாலும் தொடக்கத்திலிருந்து முடிவுவரையிலும் மொழி அறிவையும் விஞ்ஞான அறிவையும்சொல்லாலும்,(Theory)செய்கை(Practical)

முறையாலுமே போதித்து வருகிறார்கள். இந்த இரண்டில் எது குறைவுற்றாலும் அக்கல்வி முழுப்பயனும் அளிக்கத்தக்கதாக-முழுமையடைந்ததாக ஆகாது என்பதை நாம் அனுபவத்தால் அறிவோம். அது போலவே இறைவனை அறியும் அறிவை நமக்குப் போதிக்கவும், அதனை அனுபவத்தில் கொண்டு உணரவும் - தொட்டுக்காட்ட (அதாவது உபதேசம் முதலியவற்றால் விளக்க) ஒரு சற்குருவும் வேண்டும். இந்த சற்குரு நமக்கு இறையறிவைப் போதித்து நம்மை இறையருளுக்கும் பாத்திரராகும்படி வழிகாட்டி வருகிறார். நமது மனத்தை நேர் வழியில் செலுத்தவும், நம் உணர்வில் எழும் நன்மை தீமைகளை ஆய்ந்து எதிலும் மிகாமல் ஒரு சீரான நிலையில் நற்பண்பை வளர்த்துக் கொள்ளவும் வழிகாட்டி வருகிறார்கள். அவர்களோ நமக்கு அவ்வழியில் வாழ்ந்தும் காட்டுகிறார்கள்.

### கைம்மாறு கருதாத ஞானத்தொண்டு :

இந்த ஆசாரியர்கள் வாழும் மடங்களும், மேலேகண்ட ஆலயங்களும் தம்மைத்தீவிரமாக விளம்பரப்படுத்திக் கொள்ளாமல் மௌனமாக இருந்து இந்தச் சீரிய தொண்டுகளை ஆற்றி வருகின்றன. நாம் காணும் சூரியனும், சந்திரன் முதலிய கோள்களும் வானத்தே நின்று மௌனமாக இந்த மண்ணுலக வளர்ச்சிக்கு-அதன் இயக்கத்துக்கு உதவிவருகின்றன. இந்த மண்ணிலுள்ள உயிர்கள் வாழவும் வளரவும் விளம்பரமேதுமில்லாது அவை இருந்த இடத்திலிருந்தே தத்தம் செயல்களை எவ்விதம் செய்து வருகின்றனவோ அதைப்போலவே, நமது மடங்களும் கோவில்களும் அவையவை இருக்குமிடத்திலிருந்துகொண்டே தொண்டாற்றி வருகின்றன மேற்கண்ட கோள்களில் ஏதாவது ஒன்று இல்லையானாலும், நிலை மாறினாலும் அதனால் நாம் பெறும் பயன்களை இழந்து துன்புறுபவர்கள் ஆவோம். அவை இல்லாத காலத்தில்தான் அந்த இழப்பின் விளைவுகளால் நமக்கு உண்டான துன்பத்தை நாம் உணர்வோம். அதைப்போலத்தான் நமது அற நிறுவனங்கள் மற்றும் திருக்கோயில்களால் ஏற்படும் நன்மைகளும் இவை இல்லாததால் ஏற்படக்கூடிய தீமைகளும் ஆழ்ந்து சிந்திப்பார்க்கு நன்கு புலனாகும்.

### அற நிலையங்களுக்கு நிலங்கள் வந்த வரலாறு :

அறநிலையங்கள் விளக்கமாக இருக்கும்போது அவற்றால் நமக்குவிளையும்நன்மைகளை நாம்இயல்பாக அறியமுடியாது. கண் கெட்டபின் சூரியனை வழிபடுவது என்பதுபோல அவைசீரழிந்து

இல்லாதகாலத்தில்தான் அவற்றின்பயனை- அதாவது துன்பத்தை உணர்ந்து மீண்டும் நேர்செய்ய வழியறியாது துன்புறுவோம். இவ்விதமான ஒரு நிலைமை ஏற்படக்கூடாது என்பதற்காகவே- இந்த அற நிறுவனங்கள் செம்மையாக எவ்விதத் தடைகளும் இல்லாது செயல்பட்டு வரவேண்டுமென்பதற்காகவே நமது முன்னோர்கள் அந்தந்த ஆலயங்களுக்கும் திருமடங்களுக்கும் பொன்னும் பொருளும் கொடுத்ததுபோல நில நிபந்தங்களும் கொடுத்துள்ளனர். அவைகளில் நிகழவேண்டிய நித்திய நைமித்திகங்கள் நடைபெறத் திட்டமும் அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள்.

## வருவாய்களும் செலவினங்களும் :

அவ்வாறு வழங்கப்பட்டிருக்கும் சொத்துக்களிலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு மேலேகண்ட வழிபாடுகளையும் அவற்றின் கட்டிடத் திருப்பணிகள் சமயப் பிரசாரம் முதலிய நல்லறப் பணிகளையும் இவை தொன்றுதொட்டு இயற்றி வந்திருக்கின்றன; வருகின்றன. இவற்றில் குறைந்த வருமானம் உடையவையும், நிறைந்த வருமானம் உடையவையும் ஆகப் பல உள்ளன. இதில் சொல்லப்பட்ட வருவாய்கள் அல்லாது இவற்றில் பிரபலமாக உள்ள ஒருசிலவற்றிற்கு உண்டியல் வருமானமும், காணிக்கைகளும் கிடைக்கும். எவ்விதமிருந்த போதிலும் இவற்றிற்காகக் கிடைக்கும் வருமானம் முழுமையும் ஆங்காங்கும் உண்டான திட்டப்படிச்செலவுசெய்யப் போதுமானதாகவே பெரும்பாலும் இருக்கும். அந்தச் செலவுகளை நியதிப்படிச் செய்துவந்தால் இந்த வருமானத்திலிருந்து மிகுதி காண்பது என்பது இயலாது. ஆகவே இவற்றில் இயற்ற வேண்டிய பணிகள் ஒழுங்காக நடைபெற அவ்வவற்றிற்கு உள்ள நிலவருவாய் தடையேதும் இல்லாது ஒவ்வோர் ஆண்டும் உள்ள ஏற்பாட்டின்படி கிடைக்க வழிவகைகள் இருத்தல் வேண்டும். அதில் தடங்கல்கள் ஏற்பட்டால் இவற்றில் நிகழவேண்டிய அறப்பணிகளும் தடைப்படும். இவை தட்டுப்பட்டால் திருமூலர் சொல்லியருளியபடி நாட்டிலே பஞ்சமும் பிணியும் கள்வர் தொல்லையும் மிகும். மழை பொழியாது; நில வளங்கள் குறைந்து விளைவின்றித் தவிக்கவேண்டிவரும். அந்த நிலைமை ஏற்படும் என்பதை அனுபவத்தில் கண்டுதான் நம் முன்னோர்கள் அவை நிகழாது இருக்க மக்களிடையே கடவுள் வழிபாடும் இறையுணர்வும் குன்றாது காத்துவர முற்பட்டார்கள்.

## குடிமக்களிடம் நிலங்கள் :

இப்போது ஆலயங்களுக்கும் அறநிறுவனங்களுக்கும் ஒரு சோதனைக்காலம் வந்துற்றது என்றே சொல்லவேண்டும். இந்த ஆலயங்கள் மடங்களுக்கு உள்ள நிலங்கள் முதலிய சொத்துக்கள் எல்லாம் அங்கங்கும் உள்ள குடிகளிடந்தான் குத்தகைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. அவ்விதம் உள்ள குத்தகை ஏற்பாடு இன்னின்னவிதத்தில் அமையவேண்டும் என்பதற்கு சென்னை பொது தருமச் சட்டம் என்ற ஒன்று அரசினரால் இயற்றப்பட்டு அமுல் நடத்தப்பட்டுவருகிறது. அந்தச்சட்டப்படி இந்த நிலங்களில் விளையும் தானியங்களை ஒரு திட்டத்தில் பங்கு போட்டுக் குடிகள் கொடுத்திடவேண்டும் என்பது நியதி. அதாவது குடிகள் சாகுபடிக்கான செலவுகளை ஏற்று விளைவு செய்து அதில் கிடைக்கும் தானியத்தில் அக்குடிகள் 60 சதவிகிதம் எடுத்துக்கொள்வதென்றும் மிகுதியாக உள்ள 40 சதவிகிதப்பங்கை நில உடைமை கொண்ட ஆலயங்கள் அல்லது மடங்கள் அல்லது அறநிலையங்களுக்குக் களத்துமேட்டிலேயே கொடுத்துவிடவேண்டும் என்பதுதான் அந்தநியதி இவ்வாறு இவ்வற நிலையங்களுக்குக் கிடைக்கும் வருமானத்தைக்கொண்டு தான் இந்த நிறுவனங்களில் நிகழவேண்டிய வழிபாடுகள் நடக்கவும் பணியாளர்கள் ஊதியம் கொடுக்கவும், அரசாங்க வரிகள் (கிஸ்தி) அறநிலைய இலாகா உதவித்தொகைகள் கொடுக்கவும் பிற கல்வி நிலையங்கள் முதலிய நற்பணிகள் செய்யவும் பயன்படுத்தப்படுகிறது.

## குத்தகை அமைப்பும் - அடிப்படையும் :

இவ்விதம் ஒவ்வொரு ஆண்டும் பல நூற்றுக்கணக்கான குடிகளும் அவ்வப்போதும் கணக்கிட்டுத் துன்பப்படவேண்டுவதில்லை என்ற நோக்கத்தில் சராசரியாக நில உடைமைக்காரருக்கு அளக்கவேண்டியதாக உள்ள தான்யத்தைக் கணக்கிட்டு இந்த அளவு தடையேதும் சொல்லாது அளக்கவேண்டியதென்று செய்துகொண்ட (குத்தகை) ஏற்பாடும் இதில் அடங்கும். அவ்விதம் கொடுப்பதும் அந்த நிலத்தில் சராசரியாக விளையக் கூடிய நெல்லைக் கணக்கிட்டு அதில் இவற்றிற்குச்சேரவேண்டியதாக உள்ள பங்கு 40 சதவிகிதமாக இருசாராரும் ஏற்றுக் கொண்டு செய்துகொண்ட ஒப்பந்தந்தான் இது. இவ்விதம் ஒரு குறிப்பிட்ட திட்டத்தை அமைத்துக்கொண்டிருந்தாலும் எப்போதாவது விளைவில் குறைவு ஏற்பட்டுக் குத்தகையாக

ஏற்றுக்கொண்டநெல்லைக் குடிகள் அளக்க இயலாது என அவர்களுக்குத் தோன்றினுல் அந்த ஆண்டில் விளைந்த மகசூல் கண்டிருக்கும் அளவில் 40 சதவிகிதம் அளந்தும் கணக்கைத் தீர்த்துக்கொள்ளலாம். இதற்கும் அந்தச்சட்டத்தில் வழிசெய்யப்பட்டிருக்கிறது. இதனை அக்குடிமக்களும் நன்கு அறிவர். தஞ்சை மாவட்டத்தில், அதாவது சோழவளநாட்டில் வான் பொய்த்தாலும் தான் பொய்யாக் காவிரி பாய்ந்து வளம்சேர்த்து வருவதால் விளைவு பெரும்பாலும் பாதிக்கப்படுவதில்லை ஒரு போகம் குறைந்தாலும் மற்றொரு போகத்தில் விளைந்து கொடுத்துவிடும். இதனை அனுபவத்தால் எல்லோரும் அறிவர்.

## தீயவழிகளைக் காட்டும் விஷமிகள் :

பொதுவாகக் குடிமக்கள் நல்லவர்களே. ஆனுலும் அவர்களிலும் வம்புசெய்வோர் ஒருசிலர் இல்லாமலுமில்லை. அவர்களுக்கு அறிவுரை வழங்குவதுபோல நல்லதல்லாத வழிமுறைகளைச் சொல்லி அவர்கள் மனம் மாறும்படிச் செய்து இதற்காக அவர்களிடமிருந்து ஒரு ஊதியமும் பெற்றுப் பொழுதைப்போக்கும் விஷமிகளும் பலர் இருக்கிருர்கள். குடிமக்களுக்கு நன்மை பயக்கத்தக்கவற்றைச் சொல்லுவதுபோல் நல்லது அல்லாத வழிகளைப்போதிப்பதும், அழும்பு செய்யக் கற்றுக்கொடுப்பதுமாக இந்த விஷமிகள் பொழுது போக்குகிருர்கள். இவர்கள் பல கட்சிகளின் பெயரைச் சொல்லி அந்தப் பெயரைக்கொண்டு அரசுக்குப் பொய்யான செய்திகளை மனுக்கள் மூலமாக அறிவித்து வருகிருர்கள். அரசு, பொதுவாக இப்போது குடிகள் நலங்காக்கும் அரசாக ( Welfare State ) இருப்பதால், குடிகள் துன்பப்படுவதாகவும், துன்பப்படுத்தப்படுவதாகவும் பொய்யுரையான மனுக்கள் பெருகி வருவதை நம்பி, குடிகளின் துயர் துடைப்பதாகச் சொல்லி பல சட்டங்களை அவர்களுக்குச் சாதகமாகச் செய்து இருக்கிறது. இவை அக்குடிமக்களின் மனத்தை மேலும் குழப்பி நல்லவர்களும் கெட்டவர்களாக ஆகும்படிச் செய்து வருகின்றன.

## குத்தகை பாக்கியும் அரசின் சட்டதிட்டமும் :

இதன் விளைவாகக் குடிமக்கள் தாங்கள் இந்த அறநிறுவனங்களுக்கு ஆண்டுதோறும் அளக்கவேண்டிய பங்கை அளக்காமல் எடுத்துச்சென்று விடுகிருர்கள். இவ்விதம் செய்ய விஷமிகளால் தூண்டப்படுகிருர்கள். இந்த அறநிறுவனங்களுக்குக் கொடுக்க வேண்டிய குத்தகை பாக்கி ஆண்டுக்காண்டு சேர்ந்து சேர்ந்து பெருந்தொகையாகிவிடுகிறது இவற்றை வசூலிப்பதற்குள்ள எளிதான வழியும் அதற்கான பொது தருமச்சட்டத்தில்

சொல்லப்பட்டிருக்கிறது. அதன்படி உரிய அதிகாரிகளிடம் மனுக்கொடுத்தால் அரசாங்கத்தில் குடிகளின் துயர் துடைப்பதாக உள்ள கொள்கையை ஒட்டி அவர்களும் அந்தச்சட்டத்தை அதில் கண்டுள்ளபடி செயல்படுத்தாமல் குடிகளுக்குச் சாதகம் செய்வதாகக் கருதி வளர்த்திக்கொண்டே போகிறார்கள். இந்த நிலையில் இப்போது நமது அரசு இதுபோதுள்ள நிலுவைகளைக் கொடுப்பதற்கு நீண்ட கெடு கொடுத்திருக்கிறது. இதைப் போலவே சென்ற 10 ஆண்டுகளாகவே குடிகள் துயர் துடைப்பதாகச் சொல்லிச் சொல்லிப் பலப்பல சட்டங்களும் பிறப்பிக்கப்பட்டு வருவதால் குடிகள் தங்களிடம் அரசுக்குள்ள கருணையின் விளைவாக அரசு இந்த நிலுவைகளை தள்ளுபடி செய்து உத்தர விடக்கூடும் என்று நம்பி மேலும் அழும்பு செய்து வருகிறார்கள். இதேபோல இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ஒருமுறை அப்போதுள்ள நிலுவைகளைத் தள்ளுபடி செய்து அரசு உத்தர விட்டுள்ளது என்பதைப் பலரும் அறிவர்.

## நிலவருவாய் இல்லாது அறநிலையங்கள் படும் துன்பம் :

இவ்விதமாகத் தொடர்ந்து பல ஆண்டுகளாக இந்த நிலை நீடிப்பதால் நமது ஆலயங்கள் மடங்களின் செல்வநிலை மிகவும் பாதிக்கப்பட்டு உள்ளது. இப்போதுள்ள நிலையில் அங்கங்கும் நடைபெறவேண்டிய நித்திய நைமித்திகங்கள் செம்மையாக நடத்த இயலாததாக உள்ளன. மேலும் இந்த ஆலயங்கள் மடங்களில் பணியாற்றும் பணியாளர்கள் முதலியவர்களுக்குக் கொடுக்கவேண்டிய ஊதியமும் கொடுக்க இயலாத நிலைமையும் உண்டாகியிருக்கிறது. அரசின் ஆணை, இதனை ஒட்டிய குத்தகை பாக்கிகளைத் தள்ளுபடி செய்தல் முதலியவற்றால் அறநிலையங்களின் வருவாய் மிகக் குறைந்துபோயிற்று. இந்நிலையிலும் அறநிலையங்கள் இறையருளால் இயங்கி வருகின்றன. ஆனால், திருக்கோயில் திருப்பணிகள் நடைபெறவில்லை. திருவிழாக்கள் முறையாக நிகழ்த்தப்பெற இயலாது போயிற்று. அறநிலைய அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கு உரிய ஊதியங்களை உரிய காலத்தில் வழங்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. இவையாவும் சீர்படவேண்டுமானால் குடிமக்கள் முறையான பாக்கிகளை நன்றியுணர்வோடு அறநிலையங்களுக்கு வழங்கிடவேண்டும்.

## உடைமையும் - கடமையும் :

5—10—76 ஆம் நாளிட்ட 'இந்து' நாளிதழில் ஒரு செய்தி வெளிவந்திருக்கிறது. தெற்குக் கர்நாடகமாநிலத்தில், உடுப்பி மாவட்டப்பகுதியில் விளங்கும் எட்டுத் தொன்மையான திருமடங்களுள் ஐந்து திருமடங்களின் தலைவர்கள், தங்கள் திருமடத்து நிலங்களைக் குத்தகையாகக்கொண்டு பயிரிட்டுவரும் குத்தகை

யாளருக்குச் சாதகமாகக் குடியுரிமை வழங்க இசைந்திருக்கின்றனர் என்பது அச்செய்தியின் சாரமாகும். ஆனால், 15 ஆண்டுகளுக்கு முன்னரே, அப்போதிருந்த தமிழ்நாடு அரசு குத்தகைதாரர்கள் நலங்கருதிக் குடியுரிமைச்சட்டம் கொண்டுவர முயன்றபோது, தமிழகத்திலுள்ள தொன்மையான திருமடங்களும், திருக்கோயில்களும், ஏனைய அறநிறுவனங்களும், தத்தம் குத்தகைதாரர்களாகிய குடிமக்களின் நல்வாழ்வில் நாட்டங்கொண்டு மகிழ்வோடு அவர்களுக்குக் குடியுரிமை வழங்கின. தற்போது கர்நாடக மாநிலத்தில் மேற்கொள்ளப்பெற்ற இம்முடிவினை 15 ஆண்டுகளுக்கு முன்னரே மேற்கொண்ட தமிழக அறநிறுவனங்களின் நல்லெண்ணத்தைக் குடிமக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்! இவ்வுரிமை வழங்கப்பெற்றுச் சில ஆண்டுகள்வரை நன்றியுணர்வோடு, குத்தகையினை அளந்து தமது கடமையை நிறைவேற்றிவந்தகுடிமக்கள் தற்போது சிலகாலமாகத்தீயோரின் தூண்டுதல்களால் தம் கடமையினை மறந்து அறநிறுவனங்களின் வளர்ச்சிக்குத் தடையாக உள்ளனர். நன்றி மறத்தல் பெரிய குற்றம்; கழுவாய் இல்லாத பாவம்; இதனை உணர்ந்து அறநிலையங்களின் உடைமைகளே நமது வாழ்விற்கு அடிப்படை என்ற நன்றியுணர்வோடு, குடிமக்கள் உரிய குத்தகையினைச் செலுத்தித் தங்கள் கடமைகளை நிறைவேற்றுவதே நல்லறமாகும். எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போம்;

இப்போது தஞ்சை மாவட்டத்தில் குறுவைப் பருவம். இந்தக்காலத்தில்கிடைக்கும் நெல் அறுவடை செய்தும் அறுவடை செய்யக்கூடிய பக்குவத்தில் உள்ளதுமான நிலைமையில் இருக்கிறது. இப்பருவத்தில் அளக்கவேண்டிய நெல்லையாவது அக்குடிமக்கள் அளந்தால் நிலைமை ஓரளவு சமாளிக்கக் கூடியதாக இருக்கும். இதிலும் தவறினால் மேலே சொல்லியவண்ணம் இந்த ஆலயங்கள் முதலியவற்றின் செயற்பாடுகளை தொடர்ந்து செய்ய இயலாத நிலையும் ஏற்படலாம். இவ்விதமாக உள்ள நிலைமையை அரசுக்குத் தெரியபடுத்தி, 'குடிமக்கள் இவ்வாண்டுக்குள்ளதையாவது ஒழுங்காக அளக்கும்படியான ஏற்பாட்டைச் செய்து தரவேண்டும்' என்று தமிழகஅரசுக்குத் தெரியப்படுத்தியும் அதிகாரிகளைக் கண்டு எடுத்துச் சொல்லியும் நினைவூட்டுக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நிலைமை திருந்தி இந்த நற்பணிகள் நிகழவும் நாடு செழிக்கச்செய்யும் உயர் பணிகள் தடைப்படாமல் நடைபெறவும் அருளவேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை எல்லோரும் பிரார்த்திப்போமாக. இதனை உணர்ந்து அரசு செயலாற்றத்தக்க மனப்பக்குவத்தைத் திருவருள் அரசினர்க்கு அளிக்கவேண்டும் என்றும் பிரார்த்திப்போமாக.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

தீபாவளித் திருநாள்குறித்து

"ஞானசம்பந்தம்" இதழுக்கு வழங்கிய

# அருளுரை

## இந்தியத் திருநாள் :

தீபாவளித் திருநாள் நம் இந்திய நாடு முழுதும் கொண்டாடப் பெறும் பெருநாளாகும். இதனை வடநாட்டில் லக்ஷ்மி பூசையாகவும், தென்னாட்டில் சிறந்த நோன்பாகவும் அனைவரும் கொண்டாடுகின்றனர். அவரவரும் தங்கள் தங்கள் இல்லங்களில் மகிழ்ச்சியோடு கவலைகள் பலவற்றையும் மறந்து எண்ணெய்முழுக்காடி, புத்தாடை புனைந்து, இன்சுவைப் பணியாரங்கள் உண்டு, ஒளி விளையாட்டுக்களில் ஈடுபட்டுத் தங்கள் மழலைச் செல்வங்களோடும் உற்றார் உறவினர்களோடும் இன்பமாகப் பொழுது கழிக்கின்றனர், எல்லா இடங்களிலும் தீப ஒளியும் பிள்ளைகளின் ஒளி விளையாட்டுக்களும் நிகழும். எங்கும் இருள் நீங்கி ஒளி விளங்கும்.

## புராண வரலாறு :

தீபாவளியைக் குறித்த புராண வரலாறு ஒன்று உண்டு. பிரளய வெள்ளத்திலிருந்து பூமியைக் காப்பதற்கு வராக அவதாரம் கொண்ட திருமாலுக்கும் பூமிதேவிக்கும் பிறந்த நரகாசுரன் பிரமதேவனை நோக்கிக் கடுந்தவம் புரிந்து பெறுதற்கரிய பேறுகளைப் பெற்றான்; இந்திரனை எதிர்த்து அவனது காதணிகள் முதலியவற்றைக் கவர்ந்து கொண்டான். தன் குடிமக்களுக்குக் கொடுமைகள் பலவும் செய்து அரசாண்டு வந்தான். மக்கள் செய்யும் நற்செயல்களைத் தடுத்து அவர்களைப் பாவ வழியிலே செலுத்தினான். எல்லோரும் செய்வதறியாது தடுமாறி முடிவில் சிவபிரானிடம் சென்று முறையிட்டனர். சிவபெருமான் அவர்களைக் காத்தற்காகத் திருமாலுக்குப் பஞ்ச ஆயுதங்களையும் கொடுத்து அவரைக்கொண்டு நரகாசுரனைக் கொல்வித்தார். அவ்வசுரன் இறப்பதற்குமுன் நல்லறிவு பெற்றுத் தான் செய்தவைகளைக் குற்றமென்றுணர்ந்துமன்னிக்கு

மாறு வேண்டினன். தான் உயிர்விடும் இத்திருநாளில் ஆசாரம் உள்ளவர்களாயும், ஒழுக்கம் உள்ளவர்களாயும் கொலை முதலிய பாவங்களைத் தவிர்ந்து எண்ணெய் முழுக்காடி கோடி உடுத்துக் கடவுளை வழிபட்டுக் கொண்டாடுபவர்களுக்கு எல்லா நன்மைகளையும் செய்தருளுமாறு வேண்டினன். அவனைப் பெற்ற பூமி தேவியும் தன் மைந்தனின் பிழை பொறுத்தருளுமாறு வேண்டினள். திருமாலும் அதற்கிசைந்து அருள் செய்தார்.

## தீபாவளித் தத்துவம் :

நரகாசுரன் இறந்தநாள், ஐப்பசி மாதம் அமாவாசைக்கு முதல் நாளாகிய சதுர்த்தசி பொருந்திய விடியல்வேளையாகும். அவன் கேட்டுக்கொண்டபடி இத்திருநாளை ஆண்டுதோறும் மக்கள் கொண்டாடி மகிழ்கின்றனர். மக்களுடைய உள்ளத்தில் தோன்றுகின்ற தீய குணங்களே அவர்களுக்குப் பகையாய் அமைந்து துன்பத்தைத் தருகின்றன. அத்தீய குணங்கள் இறையருளால் அழிக்கப்படுகின்றன என்பதே இவ்வரலாற்றின் தத்துவமாகும். தீபாவளி என்பதற்கு தீபவரிசை என்பது பொருள். இந்நாளில் கார்த்திகைத்தீபம் போல விளக்கேற்றி வீடுகளை அலங்கரிப்பதும் உண்டு. விளக்குகள் ஏற்றிவைத்து கொண்டாடும்பழக்கம்பிற்காலத்தில் நின்றுபோயிருக்கவேண்டும் எனவும், வடநாட்டில் இது நிகழ்வதாகவும் தெரிகிறது. பத்ம புராணத்தில் தீபாவளிநாளில் செய்யப்படும் பூசை உயிர்களை நரகத்தினின்றும் காத்தலால் நரகசதுர்த்தசி எனப் பெயர்பெற்றதெனக் கூறப்படுகிறது.

## கங்காஸ்நானம் :

எல்லா நாட்களிலும் விடியல்வேளையில் எண்ணெய்முழுக்காடுவது கூடாது என்று கூறும் நூல்கள் தீபாவளி நாளில் மட்டுமே அவ்வேளையில் எண்ணெய்தேய்த்துக் குளிக்கவேண்டுமென்று கூறுகின்றன. அன்றுமட்டும் எண்ணெயில் லக்ஷ்மியும் தண்ணீரில் கங்கையும் இருப்பதாகக் கூறுவர். அன்றைய நீராட்டு, கங்கை நீராட்டுக்குச்சமம். ஆதலால்தான் தீபாவளி நாளில் ஒருவரையொருவர் சந்திக்கும்போது 'கங்காஸ்நானம் ஆயிற்று?' என்று கேட்கும் வழக்கம் உண்டாயிற்று.

## திருநாள் வாழ்த்து :

தீபாவளித்திருநாளில் மக்கள் எண்ணெய் முழுக்காடிப் புத்தாடை உடுத்தி, மகிழ்ச்சியோடு தெய்வ வழிபாடுகள் செய்து எல்லா நலங்களும் பெற்று இன்புறவும், நாடு நல்வளம் பெற்றுச் சிறப்புறவும் ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

பூம்புகார் - கண்ணகிக்கோயிலுக்கு எழுந்தருளியபோது

மேலையூர் – தாசில்ப்பண்ணை

**திரு. இரா. இராஜசேகரன் B. Sc., B. L., அவர்கட்கு**

" செந்தமிழ்ப்புரவலர் " என்னும் பட்டம் வழங்கி அருளிய

# ஆசியுரை

7—8—76

வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரி கீழைக் கடலோடு சென்று கலக்தமிடத்தில் சிறப்புற்றுத் திகழ்ந்த பெருநகரம் காவிரிப்பூம்பட்டினம். இதனைப் புகார் என்றும், பூம்புகார் என்றும் பழந்தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. தொன்றுதொட்டுச் சோழமன்னர்களின் தலைநகரமாக விளங்கிய பெருஞ்சிறப்பு இந்நகரத்திற்கு உண்டு. கடியலூர் உருத்திரங்கண்ணனார் சோழன் கரிகால் பெருவளத்தானைச் சிறப்பித்துப் பாடிய பட்டினப்பாலையில் இப்பெருநகரத்தின் பண்டைய அமைப்பும் அழகும் இனிதே விளக்கப்பெற்றிருக்கின்றன. இந்நகரத்தின் பெருஞ் சிறப்புக்கள் பலவற்றைக் கூறிய அவ்வாசிரியர் 'முட்டாச் சிறப்பின் பட்டினம்' என இதனை வியந்து பாராட்டுகின்றார்.

**பொதியம் - இமயம் - புகார் :**

நடுநிலைதவறாத சேர நாட்டு இளவரசராக இருந்து துறவு பூண்ட இளங்கோவடிகள், என்றும் அழியாதனவாக மூன்றினைக் குறித்துக் காட்டுகின்றார். தெற்கே அகத்தியர் வாழும் பொதிய மலையும், வடக்கே சிவபிரான் எழுந்தருளிய இமயமும், கிழக்கே

இன்னொரு நாட்டுக்கு வாழ்க்கை தேடி மக்கள் செல்லாத வளம்மிக்கதும் கற்புத்தெய்வமாம் கண்ணகி உறைவதும் ஆகிய புகார் நகரமும் அழியாதன என்று அவர் கூறுகிறார். சிலப்பதிகார மங்கல வாழ்த்துப் பாடலில் ஆசிரியர் இளங்கோவடிகள்,

" ஆங்கு
பொதியி லாயினும் இமய மாயினும்
பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇய
பொதுவறு சிறப்பின் புகாரே யாயினும்
நடுக்கின்றி நிலைஇய வென்ப தல்லது
ஒடுக்கங் கூறார் உயர்ந்தோர் உண்மையின் "

என வியந்து போற்றுவர். இம்மூன்றும் நிலைபெற்றுவாழ்வதற்கு 'இங்கெல்லாம் சான்றோர்கள் நிலைபெற்று வாழ்வதே காரணம்' என்று அவர் பாட்டு விளக்குகிறது. உயர்ந்தோர் என்ற குறிப்பு கற்பொழுக்கம் தவறாத தெய்வத்தன்மைமிக்க மகளிர்களையும் குறிப்பிடுவதாக எண்ண இடமுண்டு. நிறைமொழி மாந்தராகிய இளங்கோவடிகளின் இம்மந்திரத்தன்மை பூண்ட சொற்களின் ஆற்றல் நிலைபேறுடையன என்பதனை இன்றும் நம்மால் உணர முடிகிறது.

பண்டை நிலை நோக்கி........

'நீ யார்?' என்று வினவிய பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு விடை கூறும் கண்ணகி, புகாரின் பெருமைகளை எல்லாம் தொகுத்துக் கூறுவதாக வழக்குரைகாதையில் இந்நகரத்தின் பெருமைகளை இளங்கோவடிகள் விளக்குகிறார். 'ஒருபறவையின் துன்பத்திற்கு இரங்கி தராசுத்தட்டில் ஏறிய கருணையாளனாகிய சிபிச்சக்ரவர்த்தியும். ஒரு பசுவிற்கு உற்ற தன்பத்திற்காகத் தன் மகனைத் தேர்க்காலில் இட்டுக் கொன்ற மனுவேந்தனும் வாழ்ந்திருந்த, நீதியும் - கருணையும் நிறைந்த புகாரே எம் ஊர்' எனக் கண்ணகி பேசுவதனைப் பார்க்கின்றோம்.

" எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்,
வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்
அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகார்என் பதியே "

என்பன புகாரின் பெருமையினை விளக்கும் கண்ணகியின் வாய் மொழிகள். இளங்கோவடிகளாலும், கண்ணகியாலும் போற்றப் பெற்ற இந்நகரம் கடல்கோளால் அழிந்து சிற்றூராகநின்றாலும் அப்பெருமக்களின் சொற்கள் பொய்த்துவிடாது மீண்டும் இந் நகரம் மெல்ல மெல்ல வளர்ந்து தன் பண்டைப் புகழினை ஈட்டி வருதலை அனைவரும் அறிவோம்.

**அன்று நடந்த பெருவிழா :**

சிற்றூராகத் தன் பண்டைப் பெருமை எல்லாம் இழந்து நின்ற இந்நகரத்தினை மீண்டும் புதுப்பிக்கும் முதல்முயற்சியாகப் பூம்புகாரில் ஏறத்தாழ 25 ஆண்டுகளுக்குமுன் சிலப்பதிகாரப் பெருவிழா ஒன்றினை எடுத்த பெருமைக்குரியவர்களில் தாசில் பண்ணை திரு. கே. எஸ். இராமலிங்கம் பிள்ளை பெரும் பங்கு கொண்டவர். அக்காலத் தமிழக அமைச்சராகத் திகழ்ந்த நல்லறங்காவலர். திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் இவ்விழா வினைத் தொடங்கிவைத்து, பூம்புகார் வளர்ச்சிக்குக் கால்கோள் இட்டார். இந்தியப் பெருநாட்டின் நிதி அமைச்சராக விளங்கி மறைந்த தமிழறிஞர் திரு. ஆர். கே. சண்முகஞ்செட்டியார் தெளிவுரை எழுதிப் பதிப்பித்த சிலப்பதிகாரப் புகார்க்காண்ட நூல் வெளியிட்டை ஒட்டித் தலைசிறந்த பேரறிஞர்கள் பங்கேற்ற சிலப்பதிகார விழா மிகச் சிறப்பாக நடந்தேறியது. இவ்விழா எழுப்பிய உணர்ச்சியால் தாசில் பண்ணைக்கு அருகிலேயே, பத்தினித் தெய்வமாகிய கண்ணகிக்குக் கற்கோயில் ஒன்றும் அமைக்கப்பெற்று நித்திய நைமித்திக வழிபாடுகளுக்குப் ஏற்பாடு செய்யப்பெற்றது.

**எழுச்சியும் வளர்ச்சியும் ;**

சிலப்பதிகாரப் பெருவிழாவும் - பத்தினிக் கோட்டமும் அமைந்ததன் காரணமாகப் பூம்புகார் இன்றைய பெருவளர்ச்சி யைப் பெற்றுத் திகழ்கிறது. தமிழகஅரசு எடுத்த பெருமுயற்சி களால் சிலப்பதிகாரக் கலைக்கூடமும், சிலப்பதிகாரத்தில் காணப் பெறும் பல்வேறு மன்றங்களும் உருப்பெற்றன. தன் முன்னைய நிலையினைப் புகார் நகரம் புதுப்பித்து வருதலை அனைவரும் நன்கு அறிவர்.

**அன்று தந்தை.... இன்று மகன்....**

இப்பூம்புகாரின் வளர்ச்சிக்கு வித்திட்டவர்களில் பெரும் பங்குகொண்ட தாசில்ப்பண்ணை திரு. கே. எஸ். இராமலிங்கம்

பிள்ளை அவர்களுக்கு வாரிசாக அமைந்தவர் அன்பர் இராஜசேகரன். பெண்களைப் பற்றிக்கூறும் போதுதான் பிறந்த வீடு, புகுந்த வீடு என்ற இரண்டின் பெருமை பற்றியும் பேசுவர். தற்போது தாசில் பண்ணைக்கு உரியவராக விளங்கும் இராஜசேகரனும் பிறந்த இடமும், புகுந்த இடமும் (வாரிசாக வந்த இடம்) பெருமைக்கு உரியனவாக அமைந்தன. இவர் பிறந்த இடம் நிலவளமும், நீர்வளமும் சமயப்பற்றும், தருமசிந்தனையும் நிறைந்த பெருமைக்கு உரியது. இவரது தந்தையார் லால்குடி (திருத்தவத்துறை) ஜி. வரதராஜ பிள்ளை அவர்கள் தமிழ் பற்றும் சைவசமயத்தில் தோய்வும் மிக்கவர். அறச்சிந்தனை உடையவர். இவரது சமய - இலக்கிய ஆற்றலைச் சிறப்பிக்கும் வகையில் கங்கைகொண்டசோழபுரத்தில், நமது கயிலைக் குருமணி அவர்கள் இவருக்குத் 'திருக்குறள்வேள்' என்ற சிறப்புப் பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தார்கள். இன்று அவர்கள் குமாரர் இராஜசேகரன் அவர்களுக்குச் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளால் இவரது, சமய - இலக்கியத் தொண்டுகளுக்காகவும், தமிழ்ப்பெருமக்களையும், தமிழ்ப்பெரு நூல்களையும் போற்றிப் புரந்து வரும் சிறப்புக்காகவும் 'செந்தமிழ்ப் புரவலர்' என்ற பட்டமளித்து ஆசீர்வதிக்கிறோம்.

## உத்தமன் - வித்தகன் :

'நல்லவர்' என்ற சொல் இன்று திறமை இல்லாதவர் என்ற பொருளைக் குறித்து நிற்கிறது. மனிதன் நல்லவனாக இருத்தல் மட்டும் போதாது. அவன் வல்லவனாகவும் இருத்தல் வேண்டும். ஆனால் உலகில் நல்லவர்கள் பலர் வல்லமை இல்லாதவர்களாகவும், வல்லவர் பலர் நல்லவர்களாக இல்லாமல் இருப்பதும் காணப்படுகிறது. இதனை வேறுவகையில் காணவேண்டுமானால் மனிதன் உத்தமனாகவும் வித்தகனாகவும் இருக்கவேண்டு மென்றும் கூறலாம். இதனை அருணகிரிநாதர் 'மனதால் உத்தமனாகி மதியால் வித்தகனாகி' என்று குறிப்பிட்டு விளக்குகின்றார்.

## பின்பற்றவேண்டிய பண்பாடு :

இன்று பட்டம் பெற்ற இராஜசேகரன் உத்தமராகவும், வித்தகராகவும் விளங்குகின்ற சிறப்புடையவர். மனிதர்கள் எல்லோர்க்குமே அடக்கம் இன்றியமையாதது என்றாலும், செல்வர்களுக்கே அவ்வடக்கம் பெரிதும் வற்புறுத்தப்படுகிறது.

" எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வந் தகைத்து "

என்று விளக்குகிறார் திருவள்ளுவர். இராஜசேகரன் இன்று பெருஞ்செல்வம் பெற்றிருந்தும் அடக்கம் பூண்டு வாழ்வது பாராட்டற்குரியது. இப்பண்பு யாவராலும் பின்பற்றத்தக்க தாகும். ஒருவன் நல்லவனா கெட்டவனா என்பதனை, அவனிடத்தில் செல்வம் வந்து சேர்ந்தகாலையில், அவன் நடந்து கொள்ளும் முறைகளை வைத்து ஆராய்ந்து தெரிய வேண்டும். பெருஞ்செல்வம் வந்துற்றகாலையிலும் அடங்கி வாழ்வதே உண்மையான அடக்கமாகும்.

## பூம்புகார் வளர்ச்சியில்....... :

இராஜசேகரன் தம் முன்னோர் நெறிநின்று செய்துவரும் நல்லறப்பணிகள் பலவாகும். பூம்புகாரின் வளர்ச்சியில் நாட்டங் கொண்டு தம் முன்னோர் தொடங்கிவைத்த ஒரு தொடக்கப்பள்ளி யையும் ஓர் உயர்நிலைப் பள்ளியையும் சமயப் பண்பினை ஊட்டும் வண்ணம், குருகுல அமைப்பில் நடத்தி வருதல்பாராட்டற் குரியது. பூம்புகாரில் பண்பாட்டுக் கல்லூரி கட்டவேண்டுமென்ற முயற்சி மேற்கொள்ளப் பெற்றபோது கல்லூரி அமைவதற்குரிய இடத்தினை வழங்கிய சிறப்பும் இவர் குடும்பத்திற்கு உண்டு. பூம்புகார் சிவராஜயோக மடத்தினரும் இக்கல்லூரிக்கு நிலம் அளித்துள்ளனர். திருக்கடவூர் பிச்சக்கட்டளை அதிபர் திரு. கனகசபைப்பிள்ளை அவர்கள் இரண்டு லட்ச ரூபாய் இக் கல்லூரிக்காக வழங்கினர். தருமை ஆதீனமும் இக்கல்லூரி தோன்றி வளர்வதற்கு ஆசீர்வாதமாய் ரூபாய் ஐம்பதாயிரத்தினை வழங்கியிருக்கிறது. மற்றும் பலரும் இம்முயற்சிக்குத் துணை நின்றமை இங்குக் குறிப்பிடத்தக்கது.

## சிவநெறியே தமிழ் :

மாயூரத்தில் நடைபெற்றுவரும் சிறந்த – சமய – இலக்கிய நிலையம் தெய்வத்தமிழ்மன்றம். இதன் அமைப்பாளராக இருந்து இதனைச்செயற்படுத்தி வருகிறார் திரு. இராஜசேகரன் அவர்கள். தமிழ் என்றால் சிலர் சமய நோக்கினை விடுத்த ஒன்றாகக் கருதி; தனித்து நோக்குகின்றனர். இவ்வாறான முரண்பாடு ஏற்படா திருக்கவே 'தெய்வத் தமிழ் மன்றம்' என்ற பெயரைச் சூட்டி யிருக்கின்றனர். தமிழ் என்ற சொல் அறநெறியும், சிவ நெறியும் இணைந்து விளங்குவதே என்பதனை,

'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்'

என்ற சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாக்கால் அறியலாம். தமிழின் தெய்வத்தன்மையினைச் சேக்கிழார் பெருமானும்,

'ஞாலம் அளந்த மேன்மை தெய்வத்தமிழ்'

என்று குறித்தருளினார். இத்தகு தொடரை நினைந்து தெய்வத் தமிழ் மன்றம் அமைத்துத் திங்கள்தோறும் தக்க புலவர்களையும் சான்றோர்களையும் கொண்டு சமய இலக்கிய விரிவுரைகளை நிகழ்த்திவருகிறார் இவர். இந்நல்லறப்பணிகளை எல்லோரும்மேற் கொண்டு சிறக்க வேண்டு மென்ற நோக்கால் இராஜசேகரன் அவர்கள் பலருக்கும் தெய்வத்தமிழ் மன்றத்தின் நிகழ்ச்சிகளைப் பகிர்ந்துஅளித்துள்ளார். ஒவ்வொருவரையும் அறக்கட்டளைகள் அமைக்கச் செய்து திங்கள் தோறும் நினைவுச் சொற்பொழிவு களுக்கு ஏற்பாடுசெய்து மன்றம் நிலைபெற்று நிற்க ஆவன செய்துள்ளார். இவ்வகையில் ஆண்டுதோறும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் குருபூஜைத் திருநாளை ஒட்டி தருமை யாதீனத்தின் சார்பிலும் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் தெய்வத் தமிழ் மன்றத்தின் வாயிலாக ஐப்பசித் திங்களில் நடை பெற்றுவருகிறது.

**கண்ணகி என்னும் கற்புத் தீ :**

இவ்வாறான தெய்வத் தமிழ்ப்பணிகளில் ஈடுபாடு கொண்ட இராஜசேகரன் ஆண்டுதோறும், தமது பூம்புகார்ப் பத்தினிக் கோயிலில் கண்ணகி விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடி வருகிறார். சிலப்பதிகாரத்தால் உணர்த்தப்பெறும் தலையாய மூன்று நீதிகளில் ஒன்று 'உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துதல்' என்பது. கண்ணகி கற்புத்தெய்வமாகத் திகழ்ந்தவர். கற்பு என்பது நிறைகுணமே. இதனால்தான் கற்பினை 'நிறை' என்று குறித்தனர் முன்னோர். இத்தகு நிறை குணத்தாரை 'நிறைமொழிமாந்தர்' எனத் தொல்காப்பியமும் சிறப்பித்தது. கற்பே ஒருபெருந்தீயாக நமது இலக்கியங்களில் பேசப்படுகிறது. ஆகவநீயம், காருகபத்தியம், தாக்ஷிணாக்கினியம், ஆகிய முத்தீக் களோடு கற்பென்னும் தீயும் மகளிரால் வளர்க்கப் பெற்றது என்பதனைச் சேக்கிழார் குறிப்பிடுவர். கண்ணகி கற்புத்தெய்வ மாக விளங்கியதோடு – கற்புத் தீயாகவிளங்கியவர். கண்ணகி யின் கற்புத்தீ தீமை விளைத்த பாண்டியனது மதுரையிலே கிளர்ந்தெழுந்ததனைச் சிலப்பதிகாரம் விளக்குகிறது. கற்பின் விளக்கமாக அமைந்த கண்ணகி தீக்கடவுளை ஏவும்போதும்,

"பார்ப்பார் அறவோர் பசுபத் தினிப்பெண்டிர்
மூத்தோர் குழவி எனும்இவரைக் கைவிட்டுத்
தீத்திறத்தார் பக்கமே சேர்க"

என்று கட்டளை இட்டாள். தீமையைச் சுட்டெரிக்கும் அறக் கற்பே கண்ணகிக் கற்பு என்பது விளங்கும்.

அரசர்களும், அறநெறியாளர்களும் என்றும் தீமைகளை ஒடுக்கவும், நன்மைகளை வாழவைக்கவுமே விரும்பியிருந்தனர் என்பதனை நமது பண்டைய நூல்கள் விளக்குகின்றன. பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்பான் பகைவர் எதிர்நின்று, என் கூர்த்த அம்பினைச் செலுத்தப்போகின் றேன்; இக்கூட்டத்தில் ஆக்கள், பார்ப்பனர்கள், பெண்டிர், குழந்தைகளைப் பெறுதோர் ஆகியோரெல்லாம் அப்பால் போய் விடுங்கள் என்று அறங்கூறிய செய்தி புறநானூற்றில் காணப் படுகிறது.

**வாழ்த்து :**

கண்ணகி மதுரையில் வழக்குரைத்துத் தீப்படுத்தி, மங்கல மகளாகவே, கோவலன் தேவர்களுடன் வந்து அழைக்க 14 ஆம் நாள் விண்புகுந்தனள் எனச் சிலம்பு பேசுகிறது. எனவே, கண்ணகி மங்கலமடந்தையாகத் தமிழர்களது பொற்புடைக் கற்புப் புனிதத் தெய்வமாகவும் விளங்குகின்றார். இத்தகு கற்புத் தெய்வத்தின் விழாவில் பங்கேற்கும் யாவரும் கண்ணகியின் குணநலன்களைப் பெற்று உயரவேண்டும் என்பதே இவ்விழா வின் நோக்கமாகும். ஆண்டுதோறும் கண்ணகி விழாவினைச் சிறப்புற நடத்தி அறநெறியையும் செந்தமிழையும் புரந்துவரும் நல்லன்பர், செந்தமிழ்ப்புரவலர், இராஜசேகரன் அவர்களும், விழாவில் பங்கு பற்றும் அனைவரும் எல்லா வளங்களும் இனிதே பெற்று வாழச் செந்தமிழ்ச்சொக்கன் திருவருளைச் சிந்திக் கின்றோம்.

---

## பார்வையாளர் குறிப்பு

### திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

### ஸ்ரீ வீரட்டேசுவரசுவாமி தேவஸ்தானம், குறுக்கை.

அஷ்ட விரட்டானத்தில் இத்திருக்கோயில் ஒன்று. இப் புராதனக் கோயில் மிகவும் தூய்மையாகவும் நல்ல முறையிலும் தருமை ஆதீனத்தால் கண்காணிக்கப்பட்டு வருவதைக் காண மிக்க மகிழ்ச்சி. இத்திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் வீரட் டேசுவரரைத் தரிசிக்கும் பேறு கிடைக்கப்பெற்றேன்.

(ஒ-ம்.) வ. சிவசுப்ரமண்யம்
தலைமைத் தணிக்கை அதிகாரி,
சென்னை.

13 — 9 —'76

# அண்ணல் காந்தியடிகளின் — — பொன்மொழிகள்

1. கடவுளிடம் நம்பிக்கைவைத்துக் கடவுளுக்கு மட்டுமே அஞ்சி நடப்போமானால் எவருக்கும் நாம் அஞ்ச வேண்டியதில்லை.

2. நான் கடவுளுக்குப் பயந்தவன். அவனுக்குட்பட்ட எந்த ஜீவனுக்கும் அபாயம் என்பதே இல்லை. இது அவன் கட்டளை! இதை நான் முதலில் நம்புகிறேன்.

3. கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதை நிரூபித்துக் காட்டமுடியாது; அது தேவையுமில்லை. கடவுள் ஒருவர் உண்டுஎன்பதை நாம் உணராவிடில் அதனால் நமக்குத்தான் ஊறுபாடு!

4. அரசியலாரும்தேசமும் மனிதசமுதாயமும் கடவுள் நெறியில் நிற்கிறவரையில்தான் ராஜபக்தியோ தேசபக்தியோ இருக்கமுடியும்!

5. கடவுளையறிதல் தொண்டின்மூலமாகவே சாத்தியப் படும் என்பதை நான் உணர்ந்துகொண்டேன். ஆதலின் தொண்டுசெய்யும் மதத்தையே என்னுடைய மதமாகச் செய்துகொண்டேன்

6. எனது மதம் என்னைப் படைத்தவனுக்கும் எனக்கு மிடையே மட்டுமுள்ள ஒரு விஷயமாகும். நான் ஓர் உண்மையான இந்து என்றால் இந்து சமுதாயம் முழுதுமே என்னைப் புறக்கணித்தாலும் நான் இந்துவல்லாமல் போய் விடமாட்டேன்!

7. பிரார்த்தனை என்பது எனக்கு மனோபலத்தை அருளும் ஓர் அகச்சாதனம்! உபவாசம் என்பதோ என் உடலைத்தாங்கும் ஊன்று கோலாய் விளங்கும் புறச்சாதனம்!

திருச்செந்தூர்


ஸ்ரீ ஆறுமுகப்பெருமானுக்குச் சிறப்பு வழிபாடு



கந்தசஷ்டி விழா

[ 23—10—76 முதல் 28—10—76 முடிய ]

தருமையாதீனம்
ஆன்மார்த்தமூர்த்தி ஸ்ரீ சொக்கநாதப்பெருமானுக்கு நிகழ்ந்த
ஆவணிமூலப் பெருவிழாவில் (3—9—76)



திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
இருபத்தாறுவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
டாக்டர். திரு. பா. நடராசன் எம். ஏ., பிஎச். டி., அவர்களுக்கு
"பொருளியல் தத்துவப் பேரறிஞர்"
என்ற பட்டம் அளித்துப் பொன்னுடை போர்த்தி ஆசி அருளல்.

# சிவமூர்த்தங்கள்

" நஜன் "

**முன்னுரை :**

சிவமூர்த்தங்களைப்பற்றி அறியுமுன் சைவத்தைப்பற்றிப் பொதுவாக சில விஷயங்களை அறிந்துகொள்ளவேண்டும்.

" இன்றைக்கு ஏறத்தாழ 20,000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாய் இன்றுவரை உயிர்ப்பு ஆற்றலுடையதாய் நிலவிவரும் பழம் பெரும் சமயம் சைவ சமயமே " என்று சர் ஜான் மார்ஷல் என்ற அறிஞர் கூறுகிறார். மேலும் பிற சமயங்களைப்போல மேற்கே இருந்தோ புதியதாகவோ வந்து புகாமல் தமிழகத்திற்கே புதியதாய் தொன்மைக்காலம்தொட்டே சைவ சமயம் நிலவிவருகிறது.

சைவ சமயம் அக்காலத்தில் சமயம் என்று வழங்கப்படவில்லை. திருநெறி, மெய்நெறி, முன்னெறி, திருமாநெறி என்று நெறிவார்த்தையைச் சேர்த்தே வழங்கிவந்துள்ளனர். சமயம் என்ற சொல்லுக்கும் நெறி என்ற சொல்லுக்கும் வேறுபாடு உண்டு. சமயம் என்றால் நியமிக்கப்பட்டது. வரையறுக்கப்பட்டது என்று பொருள். அத்வைதம் துவைதம் விசிஷ்டாத்வைதம் பௌத்தம் ஜைனம் இவை எல்லாம் ஒவ்வோர் ஆசாரியரால் நியமிக்கப்பெற்று பிரசாரம் செய்யப்பட்டவையாதலின் மதம் என்றோ சமயம் என்றோ அழைக்கப்படுகின்றன. நெறி என்றழைக்கப்படுவதில்லை. ஞானசம்பந்தர் தம் அருட்பாக்களை " திரு நெறிய தமிழ் " என்றே குறிப்பிடுகிறார். சேக்கிழாரும்,

" ஓங்கும் பொருட்சமய மூதற்சைவ நெறி
தான்பெற்ற புண்ணியக் கண் இரண்டு "

என்கிறார்.

**பிறப்பற்ற மூலக் கடவுள் :**

வேத முனிவர்கள் ஆரம்பகாலத்தில் இயற்கையில் விளங்கிய வியத்தகு ஆற்றல்களைத் தனித்தனிப் பல்வேறு தெய்வமாக வழி

பட்டுவந்தனர். பின்னர் அவ்வாற்றல்களை ஒன்றாக இணைத்து ஒரு முழுமுதற் செம்பொருளாகக்கொண்டு வழிபட்டனர். அவ்வாறு உணர்ந்த முதற் பொருளை "ஏகம்" எனவும், "சத்" எனவும் போற்றிவந்தனர். ஏகம் என்றால் ஒன்று அல்லது ஒருவன் என்று பொருள். சத் என்றால் உள்ளது என்று அர்த்தம். இதனால் வேதங்களிலும் உபநிஷத்துக்களிலும் 'ஏகம்', 'சத்' என்ற சொற்கள் வரும் இடங்களிலெல்லாம் முதற் பொருளின் சமஷ்டிநிலை (முழுமுதல்) குறிக்கப்படும்.

"சுவேதா சுவதா" உபநிஷத் அந்த 'ஒருவன்' ருத்திரனே என்கிறது. இங்கு ருத்திரன் என்பது பரமசிவனைத்தான் குறிக்கிறது. துன்பத்திலிருந்து கடத்தும் ஆற்றல் உள்ளவன்; ருதம் த்ராவயதி – (துன்பத்திலிருந்து கடப்பிக்கிறவன்). ஆகவே ருத்ரன் எனப் பெயர் ஏற்பட்டது.

சிவபிரானை 'ஒருவன்' என்ற வேத வழக்கைப் பின்பற்றியே மாணிக்கவாசகர் "ஒருவன் என்னும் ஒருவனைக் காண்க" என்று குறிப்பிட்டிருக்கிறார். 'சத்' எனப்படும் ருத்திரனே உனக்கு வணக்கம் என்று யஜுர் வேதத்திலும் தைத்ரீக ஆரண்யகத்திலும் வருகிறது. 'சத்' என்றால் சக்தியோடு இணைந்த சிவன் என்று நீலகண்ட சிவாசாரியார் பொருள் கொள்கிறார். "சைவ சித்தாந்தம்" சிவபெருமான் ஒருவனே பதி என்கிறது. உயிர்கள் அனைத்தும் பசுக்கள். அவன் ஒருவனே தலைவன் என்கிறது.

சிவநெறியில் முதற்கடவுளுக்குப்பிறப்பு கூறப்படுவது இல்லை. கடவுளுக்கு உபசாரமாகக்கூட பிறப்பு உண்டு என்று கூறுவது சைவ மரபு அன்று. பரமுக்திநிலையாகிய இன்புறுநிலையில் உயிருக்கோ கடவுளுக்கோ உடம்பு உண்டு என்ற கொள்கை சைவத்தில் இல்லை.

## சிவம் என்றால் என்ன ?

சிவம் என்றால் செம்பொருள் என்று அர்த்தம். தூய பேரின்பப் பொருள் என்பதே அதன் சரியானபொருள்.

"குறைவிலா மங்கலக் குணத்தன் ஆதலின்
நிறைமல அநாதியின் நீங்கி நிற்றலின்
அறைகுவர் சிவனென அறிவின் மேலவர்"

என்கிறது காஞ்சிப்புராணம்.

இறைவன் உயிர்களின் அறிவாற்றல்களுக்கு அப்பாற்பட்டவன். மெய்யுணர்வு நிலையில் தூய பேரின்பப் பொருளாக அவனை அனுபவிக்கமுடியும். அத்தகைய உண்மை அனுபவத்தை இளமையிலேயே அனுபவிக்கமுடியும்.

சிவ என்ற சொல்லுக்கே விசேஷ மதிப்பு உண்டு. இதனைத் திருமூலர்,

" சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்றிடச் சிவகதி தானே ".

ஸூதசம்ஹிதையும்,

சிவப் பிரஸா தேன விஞன புத்தி :
சிவப் பிரஸாதேன விஞன யுக்தி :
சிவப் பிரஸாதேன விஞன சித்தி :
சிவப் பிரஸாதேன விஞன முக்தி :

என்கிறது.

இனி சிவமூர்த்தங்கள் பற்றி ஒவ்வொன்ருகத் தெரிந்து கொள்வோம்.

## 1. லிங்கத் திரு உரு

சிவாலயங்களில் சிவபெருமான் லிங்க ரூபமாகவே காட்சி அளிக்கிருர். இந்த லிங்கத்திலிருந்தே எல்லாம் உண்டாயின.

லிங்கே சர்வம் சமுத்பன்னம்
லய : தத்ரைவ சோச்யதே l
சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹார மேவோக்தம்
லிங்க நாமாஸ்ய சோச்யதே ll

எப்படி லிங்கத்திலிருந்து எல்லாம் உண்டாகிறதோ அப்படியே லிங்கத்துள் எல்லாம் அடங்குகின்றன. படைப்பு, காப்பு, அழிப்பு ஆகிய முத்தொழிலும் அதில் அடங்கியதால் ' லிங்கம் ' எனப் பட்டது. சேக்கிழாரும்,

" காணாத அறிவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்
நீணாக மணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம் "

என்கிருர். பரம்பொருள் உருவமற்றது என்பதைக் காட்டுகிறது லிங்கஸ்வரூபம். திருமூலர் அன்பையே சிவம் என்கிருர்.

சிவலிங்கம் நம்மை நாம் அறிய உதவும் தத்துவ மூர்த்தி யாகும். பரமசிவம் ஆன்மாக்களின் தியான பாவனை நிமித்தம் நிஷ்கள சகள திருவுருட் கொண்ட நிலை இந்த லிங்கம்.

லிங்கத்தின் பிண்டிகை ( ஆவுடையார் ) சக்திருபம். லிங்கம் சிவருபம். ஆகவே லிங்கம் ஞானசக்தி வடிவம். பீடம் கிரியாசக்தி வடிவம். லிங்கம் வியக்தம், வியக்தாவியக்தம், அவ்யக்தம் என்று மூன்று வகைப்படும்.

சந்திரசேகரர் சோமாஸ்கந்தர் முதலிய சகள ருபமே வியக்தம். சிவலிங்கம் வியக்தாவியக்தம் இத்திருவுருவில் விருத்தமே ருத்ர பாகம். பீடத்தின் அடி நாற்குமூலை பிரும்ம பாகம். நடுவில் சமூலை விஷ்ணுபாகம், பிரும்மபாகம் நபும்சக லிங்கம் என்றும் விஷ்ணுபாகம் ஸ்திரிலிங்கம் என்றும் உருத்திர பாகம் புருஷலிங்கம் என்றும் கூறப்படுகிறது. ( தொடரும் )

---

## EXTRACT FROM THE VISITOR'S BOOK

Dharmapuram Adhinam
Sri Sattanathaswami Devasthanam, Sirkazhi.

What a glory and happiness it was to pay my respects to the onicent Sattanathaswami temple. The peace of mind one enjoys when within the precincts of the temple is enhanced by the cleanliness of the temple. Thanks to Adhinam. Godliness and Bhakthi cannot die so long as human race exists.

(Sd.) V. Sundaresan,
9—8—76. Assistant Secretary to Government of Tamil Nadu.

Sri Panchanatheeswaraswamy Devasthanam, Thiruvaiyaru.

My wife and I had an opportunity to visit the temple and offer our homage to Sri Panchanatheeswaraswami. We are grateful.

(Sd.) P. K. Dave,
7—9—76. Advisor to Governor, Tamil Nadu.

# தலச் சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

வித்துவான். திரு. வி. சா. குருசாமிதேசிகர் எம். ஏ

## 1. திருக்குறுக்கைவீரட்டம்

சோழ வளநாட்டில் காவிரியின் வடகரைத் தலங்களில் 26 ஆவது தலமாக வைத்தெண்ணப்படுவது இத்தலம். தஞ்சை மாவட்டம் மாயூரம் வட்டத்தில் நீடூர்ப் புகைவண்டி நிலையத்திலிருந்து 5 கல் தொலைவில் உள்ளது. மாயூரம் பட்டவர்த்தி பேருந்துச் சாலையில் நீடூரை அடுத்து இத்தலத்துக்குச் செல்லும் மேற்கு நோக்கிய வழியில் சென்றால் இத்தலத்தை அடையலாம்.

அட்ட விரட்டத்தலங்களில் காமனை, இறைவன் நெற்றி விழியால் எரித்த தலம். தருமையாதீன அருளாட்சிக்குட்பட்ட இக்கோயில் சிறந்த முறையில் திருப்பணிகள் பலவும் செய்விக்கப் பெற்றுத் தூய்மையோடு விளங்குகின்றது.

### மறுபெயர்கள் :

கடுக்காய் மரம் தலவிருட்சமாதலின் கடுவனம் அல்லது அரிதகிவனம் எனவும், இறைவன் அம்பிகையைப் பிரிந்துயோகம் செய்த இடமாதலின் யோகீசபுரம் எனவும், காமனை எரித்த இடமாதலின் காமதகனபுரம் எனவும், இலக்குமியின துகம்பத்தை (நடுக்கம்) போக்கிய தலமாதலின் கம்பகரபுரம் எனவும், தீர்க்கவாகு முனிவர் இத்தலத்து இறைவனை அபிடேகித்தற்குக் கங்கைநீரை விரும்பித் தமதுகரங்களை நீட்டக் கரங்கள் நீளாது குறுகினமையால் குறுக்கை எனவும் பெயர்கள் வழங்கப்படுகின்றன.

### கோயிலமைப்பு :

கோயிலுக்கு எதிரே சூல தீர்த்தம் விளங்குகிறது; தீர்த்தத்தை அடுத்து ஒன்பது நிலைகளோடு கூடிய இராஜகோபுரம் கோயிலுக்கு அணி செய்கிறது. மேற்கு நோக்கியசந்நிதி; இரண்டு பிராகாரங்களை உடையது. இராஜகோபுரத்தைக்

கடந்து உள்ளே செல்லும்போது கோபுர நிலைவாயிலில் கணபதி முருகன் திருவுருவங்கள் நின்ற திருக்கோலங்களோடு விளங்குவதைத் தரிசிக்கலாம்.

இராஜகோபுர வாயிலைக்கடந்துவெளிப் பிராகாரத்தைவலம் வந்து சந்நிதியை அடையலாம். சந்நிதியில் நந்திமண்டபம் விளங்குகிறது. அதைக் கடந்து உள்ளே சென்றால் அம்பிகை கோயில் தெற்கு நோக்கி விளங்குகின்றது. அம்பாள் சந்நிதியில் விளங்கும் பெரிய மண்டபம் கோயிலுக்கு முன்மண்டபமாகத் திகழ்கிறது.

இரண்டாங் கோபுரத்தைக் கடந்து உள்ளேசென்றால். மகா மண்டபத்தில் அழகிய விமானத்தில் காமதகனமூர்த்தி எழுந்தருளிவிளங்கும் சந்நிதியை அடையலாம். பிள்ளையார், முருகன், மகாலக்ஷ்மி திருவுருவங்களை வழிபட்டுக்கொண்டு அர்த்த மண்டபத்திற்குள்ளே சென்றால் இறைவன் சந்நிதி அடையலாம். மூலமூர்த்தியாகிய வீரட்டேசுவரரை வழிபட்டுக்கொண்டு வெளியே வரும்போது நடராஜ சபை விளங்குகின்றது.

உட்பிராகாரத்தில் கர்ப்பக்கிருகக் கோஷ்டங்களில் பிர்மா, இலிங்கோத்பவர், தக்ஷிணாமூர்த்தி திருவுருவங்கள் விளங்குகின்றன. இத்தலத்துக்குரிய குறுங்கை விநாயகர் காட்சி தருகின்றார். குறுங்கை முனிவர் உருவமும் உள்ளது. சுவாமியின் கர்ப்பக்கிருக விமானத்தில் இறைவன் யோகத்தில் வீற்றிருத்தல், மன்மதன் மலர்க்கணை தொடுத்தல், காமனை இறைவன் விழித்து எரித்தல் முதலிய இத்தல வரலாற்று நிகழ்ச்சிகள் சுதைச் சிற்பங்களாக அமைக்கப்பெற்றுள்ளன.

## மூர்த்திகள் :

இறைவன் ஸ்ரீ வீரட்டேசுவரர். இறைவி ஸ்ரீ ஞானம்பிகை. காமதகன மூர்த்தியின் பெயர் ஸ்ரீ யோகீசுவரர். அம்மை-பூரணி மன்மதன் இரதி திருஉருவங்களும் உள்ளன.

## தலப் பெருமை :

அட்டவீரட்டத்தலங்களுள் இத்தலம் காமதகனம் நடைபெற்றவூர். இறைவன் தாட்சாயணியைப்பிரிந்து யோகம் புரிவதற்கு எழுந்தருளிய தலம். இங்குள்ளசபை காமன் அங்கநாசினிசபை எனப்படும். சம்புவிநோதசபை எனவும் கூறப்படும். இறைவன் புரியும் நடனத்திற்கு வீரநடனம் என்று பெயர்.

### தீர்த்தம் :

கோயிலுக்கு முன்னுல்விளங்கும் சூலதீர்த்தம் கங்கையிற் புனிதமுடையது. இதன் பெருமையறியாது, கங்கையைக்கொணர விரும்பிய காரணத்தினுல்தான் தீர்க்கவாகு முனிவரின் கை குறுகிற்று. இறைவன் கண்ணழலால் வெந்த காமனுக்கு உயிரளித்த சிறப்புடையது.

இவ்வூரின் வடபால் ஓடும் பழவாறு ஞானதீர்த்தம் எனப் படும். யோகநிலையிலிருந்த இறைவன் திருக்கண்களிலிருந்து வெளிவந்த ஆனந்தநீர் கலந்ததால் இப்பெயரைப் பெற்றது.

### புராண வரலாறு :

யோகீசுவரர் : சிவ நிந்தனைபுரிந்த தக்கன் செய்த யாகத்திற்குத் தந்தை என்ற உரிமையினுல் அம்மையார் செல்ல விரும்பி இறைவனிடம் விடை கேட்டார். தானே கடவுள் எனத் தருக்கி நிற்கும் தக்கன் செய்யும் யாகத்திற்கு நீ செல்லல் ஆகாது என்று இறைவன் தடுத்தார். கணவனுர் சொல்லையும்மீறித் தக்க யாகத் திற்குச் சென்ருள் அம்பிகை. யாகசாலையை அடைந்த அம்மை யைத் தக்கன் 'அழையாமல் வந்ததேன்' எனக்கூறி அவமதித் தான். தேவியைத் தான் மதியாததோடு தேவர்களும் மதிக்கக் கூடாது எனத் தடுத்தான். மனம்நொந்த அம்மையார் 'யாகம் அழிக! நீயும் அழிக!' எனச் சபித்தார். இறைவனை மதியா தியற்றிய வேள்வியை வீரபத்திரர் தோன்றி அழித்தார். பலர் உயிர் துறந்தனர். இறைவன் மறக்கருணையை மாற்றி அறக் கருணை உடையவராய் கடுக்காய் மர நீழலில் எழுந்தருளி யோகீ சுவரர் ஆனுர். இறைவி தக்கன் மகளாய்ப் பிறந்த பெயர் நீங்க இமவான் மகளாய்ப் பிறந்து இறைவனை மணம் புரியத் தவம் இயற்றினுர். இறைவன் வெளிப்பட்டு மணம் புரிந்து கொள்வ தாகக் கூறி மறைந்தார்.

### மன்மத தகனம் :

இறைவன் அம்மையும் தானுமாய்க் கூடியிருந்தால்தானே உலகம் தழைக்கும். இருவரும் தனித்தனியே யோகத்திருப்பா ராயின் உலகில் என்ன நடக்கும்? எல்லோருமே காமவுணர்ச்சி மறந்தனர். இறைவன் யோகமிருந்த ஒருகணம் உலகிற்குப் பல யுகங்களாயின. உலக வளர்ச்சி தடைப்பட்டுநின்றது.

சூரபதுமனுடைய துன்பம் பொறுக்கலாற்ருத தேவர்கள், இந்திரனிடம் முறையிட அவன் தேவகுருவை வினவினன். அவர் சிவபெருமானிடம் ஆற்றுப்படுத்தினர். இந்திரன் திருக்கயிலை மலையை அடைந்து தவஞ்செய்தான். சிவபிரான் வெளிப்பட்டார். தக்கன்செய்த வேள்விக்குச்சென்றமையால் இத்துன்பம் உங்கட்கு விளைந்தது. நமக்கு ஒரு குமாரன் பிறப்பான். உங்கள் இடர் தவிர்ப்பான் ; என்ருர்.

இந்திரன் நான்முகனை அணுகினன். இருவரும் திருமாலிடம் சென்று அமரர் இடர்நீக்கும் வழியை ஆராய்ந்தனர், 'யோகு விற்றிருக்கும் சிவன் உமையோடுகூடினலன்றி நம் இடர் நீங்காது' எனத் திருமால் கூறியதை அறிந்த நான்முகன் மன்மதனை அழைத்து இறைவன் மன நிலையைமாற்றுதற்கு அவர்மீது மலர்க் கணைகளைத்தொடுக்குமாறு பணித்தனன். மன்மதன் அஞ்சினன். முடிவில் செய்வதறியாது தனது கரும்புவில்லை வளைத்து பூப் பாணங்களை இறைவன்மீது செலுத்தினன். இறைவன் தம் திருக்கண்களைத் திறந்தார். நெற்றிவிழியினின்றும் தீ பரவியது மன்மதன் மடிந்து பிடி சாம்பலானன்,

## காமன் உயிர் பெற்றது:

தேவர்கள் வேண்டுகோளின்படி இறைவன் யோகம் தவிர்ந்து எழுந்தார். பார்வதிதேவியை மணம் புரிந்து கொண்டார். இரதிதேவியின் வேண்டுகோளின்படி மன்மதனை மனைவிக்கு உருவனுகவும் மற்றவர்க்கு அருவனுகவும் தோற்று வித்தார். அதுமுதல் மன்மதன் அனங்கன் (அங்கமில்லாதவன்) எனப் பெற்ருன். இறைவன் காமாங்கநாசன் என வழங்கப் பெற்ருர்.

## தீர்க்கவாகு:

இவர் இமயமலையில் தவம்செய்தவர். திருநீறும் கண்டிகை யும் நீங்காதவர். தவத்தைச்செய்தற்குவிரும்பிய தவமுனிவராகிய இவர் பல தலங்களை வணங்கிக்கொண்டு குறுக்கை வந்தார். தமது வழக்கப்படி நீராடி, ஆகாயகங்கையை அள்ளிப், பெரு மானுக்கு அபிஷேகிக்கக் கையைநீட்டினர். கை நீளவில்லை. விநாயகரிடம் சென்று வேண்டினர். விநாயகர் இத்தலத்து யாமும் அவ்வாறிருக்கிறேம் பார் என்ருர். முனிவர் வருந்தி தலத்தின் இயல்பு இதுவாயின், உயிர்விட்டுவிடுதலே மேலென்று கல்லிடைத் தலையை மோதப்போனர். அதில் ஒரு கை வெளி வந்து தடுத்தது. இறைவன் அம்மையாரோடு இடபவாகனத் தில் காட்சியளித்தார். முனிவர் தம் கை குறுகிய காரணம்

வினவ, இறைவன் தலப்பெருமையை அறிவித்து 'நீ இதன் பெருமையை அறியாது கங்கையை விரும்பினமையின் உன் கையைக் குறுக்கினேம்' என்றார். அப்போது இறைவன் அளித்த திருநாமமே குறுங்கைமுனி என்று வழங்கப்பெறுகிறது.

**கல்வெட்டுக்கள் :**

இத்தலத்தைப்பற்றி இருபத்தொருகல்வெட்டுக்கள் உள்ளன. இவற்றுள் முதலாம் இராஜராஜன் காலத்ததுஒன்று. விக்கிரம சோழன் காலத்தது ஒன்று. கோப்பெருஞ்சிங்கன் காலத்தது ஒன்று. விஜயநகர வேந்தர் காலத்தன இரண்டு. எஞ்சியன மூன்றாங் குலோத்துங்கன் இராஜாதிராஜ தேவன் என்போர் காலத்தவை. இவ்வூர் விருதராஜபயங்கர வளநாட்டுக் குறுக்கை நாட்டுக் குறுக்கை என வழங்கப்படுகிறது.

கோயில் திருவீரட்டானமுடையார் கோயில் எனவும், வீரட்டேசுரம் எனவும் குறிக்கப்பெறுகிறது. இறைவன்பெயர் குறுக்கையுடைய திருவீரட்டானமுடையார் எனவும் இறைவிபெயர் பெரிய நாச்சியார் எனவும் கூறப்பட்டுள்ளது. இன்னும் வீதிவலநாதர் கூத்தராய் வீதிபோந்தார் முதலிய திருப்பெயர்களும் குறிக்கப்பட்டுள்ளன. அப்பர் சுவாமிகள் 'கூத்தராய் வீதிபோந்தார் குறுக்கை விரட்டனாரே" எனக் கூறும் தொடரை உட்கொண்டு திருவீதி உலாநாதரை அத்தொடராலேயே வழங்கல் அறியத்தக்கது.

இத்தலத்தில் வைகாசித்திங்களில் திருவிழா நடந்தது. இறைவனை மணவினைக்குத் தூண்டிய காமன் விழா வேனிற் காலத்து நிகழ்வது பொருத்தம் அல்லவா? இவ்விழாவை 'இக்கோயிலுடையார் கூத்தராய் விதிபோந்தார்க்கு வைகாசித் திருநாள் திருஎழுச்சிக்கு' என்ற கல்வெட்டுத்தொடரும் குறிப்பிடுகிறது.

இக் கோயிலின் மகாமண்டபத்தை எடுப்பித்தவன் மூன்றும் குலோத்துங்கனுவான். இரண்டாங்கோபுர வாயிலுக்கு மதுவரசன் திருவாயில் என்று பெயர். இவ்வூரில் காணியுடைய அகப்பரிவாரப் பெண்டுகளில் உமையாழ்வார் என்னும் அம்மையார் இக்கோயிலில் திருப்பள்ளியறைநாச்சியார் உருவத்தை எழுந்தருள்வித்தவராவார். முதற் கோபுரத்தின் மேற்குப்பக்கத்தில் 'குறுங்கை மகாமுனி நித்யம் சதாசேர்வை' என்று எழுதப்பட்டுள்ளது. இதற்குக் கீழே அம்முனிவர் படிவமும் உள்ளது.

## தலவரலாற்றை வற்புறுத்தும் ஆதாரம்

முதற்கோபுரத்தின் மேற்குப் பக்கத்தில் "குறுங்கை மஹா முனிரிஷி நித்தியம் சதாசேர்வை" என்று எழுதப் பெற்றுள்ளது. இதற்குக் கீழே குறுங்கை முனிவரின் படிவமும் இருக்கின்றது. இச்செய்தி இத்தல வரலாற்றை வற்புறுத்தும் ஆதாரமாயுள்ளது.

## அளிக்கப்பெற்ற நிபந்தங்கள்

இராஜாதிராஜதேவரின் ஆறும் ஆண்டில் திருக்குறுக்கையான விக்கிரமசோழ சதுர்வேதி மங்கலத்து மகாசபையார் திருவிரட்டானமுடையார்க்குச் சந்திராதித்தவரை திருஅர்த்தசாமத்துக்கு நாளொன்றுக்கு நூறு செங்கழுநீர்த் திருப்பள்ளித் தாமம் நித்தற்படி சாத்தக் கடவதன்பொருட்டு ஊரின் கீழ்பால் நிலம் அளித்துள்ளனர்.

மேற்குறித்த மன்னரின் பதினன்காவது ஆண்டில் திருக்குறுக்கையுடைய திருவிரட்டானமுடையார்க்குத் திருநந்தவன உடலாக, (மூலதனமாக) உய்யக்கொண்டார் வள நாட்டு, அம்பர் அருமந்தை அரையான் சீவேதவனப் பெருமான், குறுக்கையான இருமடி சோழ சதுர்ப்பேதி மங்கலத்தில்பிறந்த குலோத்துங்கசோழநல்லூரில் ஒன்பது மா முக்காணி நிலத்தை விலைக்கு வாங்கிக்கொடுத்துள்ளான்.

மூன்றுங் குலோத்துங்க சோழ தேவரின் பதினொன்றும் ஆண்டில் திருஞானசம்பந்தப் பெருமானுக்குத் திருவிளக்குப் புறமாகப் பலர் பக்கலும் நிலங் கொண்டு விடப்பட்டுள்ளது. இதைக் குறிக்கும் கல்வெட்டில் "குறுக்கை நாட்டுத் திருக்குறுக்கையுடைய திருவீரட்டானமுடையார் கோயிலில் கும்பிட்டு இருக்கும் ஆண்டார் பாலுமாம் பெரியார் திருஞானசம்பந்தர்" என்று இந்நாயனர் பாராட்டப் பெற்றுள்ளார்.

இராஜாதிராஜதேவரின் பன்னிரண்டாம் ஆண்டில் வீதிவிடங்கன் செம்பியன் பல்லவரையன் உள்படச் சிலர் திருநுந்தாவிளக்கு ஒன்றினைச் சந்திராதித்தவல் எரிக்கக்கடவதற்கு நற்காசு ஐம்பதை வைத்துள்ளனர்.

மூன்றுங் குலோத்துங்கதேவரின் இருபதாம் ஆண்டில் திருநாவுக்கரசு திருக்குகையில்(மடம்)எழுந்தருளின மாகேசுவரர் (சிவனடியார்) களுக்கு அமுது செய்வித்தருள நூற்றெருபது

ஐங்கலனே தூணிநெல் வைக்கப்பட்டுள்ளது. இந் நெல்லைப் பலர்க்கும்பொலிசைக்கு உபயமாகக் கொடுத்துப் பலிசையால் முதலான நெல்லைக்கொண்டு அவ்வறம் நடத்தப்பட வேண்டு மென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### மனை விற்பனை

மூன்றுங் குலோத்துங்கசோழனின் முப்பதாம் ஆண்டில் இக் கோயில் ஸ்ரீ மாகேசுவர கங்காணி செய்வாரும் சிகாரியஞ் செய்வாரும், தேவதானம் கோயில் கணக்கரும் உள்ளிட்ட அனை வரும் இக்கோயில் திருமடவிளாகத்து இருந்த ஆண்டார் ஜயங் கொண்ட சோழமண்டலத்து மணவில் கோட்டத்துப்பழையனூர் நாட்டு உடையார் நெல்மலி கிழான் திரு ஏகம்பமுடையான் கந்தையாபரணர்க்குக் குழைகயாக அஞ்சரைக்கோல் மனையை நூறுகாசுக்கு விற்று அதை ஸ்ரீ பண்டாரத்தில் ஒடுக்கலாயினர்.

### பண்டை வழக்கம்

"ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ ராஜாதிராஜ தேவர்க்கு யாண்டு ஆறுவது ... ... நாயற்று பூர்வ பக்ஷத்து திதியையும் சனிக்கிழமையும் பெற்ற புனர்பூசத்து நாள் விருத ராஜபயங்கர வளநாட்டுக் குறுக்கையான விக்கிரமசோழ சதுர்ப் பேதிமங்கலத்து மகாசபையோம்நம்மூர்உடையார் திருவிரட்டான முடையார் கோயிலில் மூலப்பிரத்திய (பழைய அடியார்) ஏகனை ஆதிசண்டேசுவர தேவர்க்கு நாங்கள் ஊர்க்கீழ் இறையிலி செய்து கொடுத்த பரிசாவது :— உடையார் திருவிரட்டான முடையார்க்குத் திருவர்த்தசாமத்துக்கு" என்னும் இக்கோயிற் கல்வெட்டுப் பகுதியால் சிவாலயங்கட்குச் சண்டேசர் பெயரால் சாசனம் செய்து கொடுக்கும் வழக்கம் முற்காலத்தில் இருந்தது என்பதை அறிகின்றோம்.

## 2. திருக்கருப்பறியலூர்

சோழவளநாடு நீர்வளமும் நிலவளமும் பொருந்திய நாடு. "ஒரு பிடி படியும் சிறிடம் எழுகளிறு புரக்கும் நாடு" என இந்நாட்டின் வயல்வளத்தைப் பாராட்டுகிறது புறநானூறு. இந்நாட்டை ஆண்ட மன்னர்களும் அரசு அலுவலரும் அவர் தம் தேவியரும் அமைச்சர் சேனாதிபதி முதலிய மக்களும் தெய்வ பக்தியில் சிறந்து விளங்கினர். காவிரியின் இருகரை மருங்கிலும் எண்ணற்ற சிவாலயங்களை எழுப்பித்துச் சோழவள நாட்டினைக் கலை மணமும் கடவுள் மணமும் கமழும் நாடாக விளங்கச்

செய்தனர். இந்நாட்டில் காவிரியின் வடகரையில் விளங்கும் பாடல்பெற்ற சிவதலங்களில் 27 ஆவதாக விளங்குவன திருக் கருப்பறியலூர், திருக்குரக்குக்கா ஆகிய தலங்கள்.

மாயூரம் மணல்மேடு பேருந்துச் சாலையில் அமைந்துள்ள பட்டவிருத்தி என்ற சிற்றூரிலிருந்து வடகிழக்கே 1 கல் தொலைவில் உள்ளது. இது வைத்தீஸ்வரன் கோவிலிலிருந்து மேற்கே 5 கல் தூரத்தில் உள்ளது. தலைஞாயிறு என வழங்கப் பெறுகிறது. ஊர்ப் பெயரும் கோயிற் பெயரும் பல தலங்களுக்கும் வெவ்வேறாக இருத்தல்போல இத்தலத்தின் பெயர் கொகுடி (முல்லை)க்கோயில் எனவும் வழங்கப்படும். இத்தலம் தருமை ஆதீன அருளாட்சியில் சிறப்புற்றுத் திகழ்கிறது.

## தலப்பெருமை :

இத்தலம் திருஞானசம்பந்தர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகிய இருவர்தம் தேவாரப் பாடல்களைப் பெற்றுத் திகழ்கின்றது இத்தலத்தில் செய்யும் அறச்செயல்கள் ஒன்றுக்குப் பத்தாகப் பெருகும் என்பர். இப்பயனளிக்கும் இத்தல மகிமையை பிரமதேவன் வசிட்டருக்குச் சொல்ல வசிட்டர் இங்கு வந்து இலிங்கம் அமைத்து வழிபட்டு உணர்வரிய மெய்ஞ்ஞானம் பெற்றுர் என்பது தல புராணம். சீகாழித் திருக்கோயிலைப் போலவே மலைக்கோயிலை உடையதாயிருப்பதாலும் உமாமகேஸ் வரர் சட்டைநாதர் எழுந்தருளி விளங்குதலாலும் இது மேலைக் காழி என வழங்கப்பெறுகிறது.

## தலப்பெயர்களும் காரணங்களும் :

முல்லை தல விருட்சமாதலின் யூதிகாவனம், பிறவிக்கு ஏதுவாகிய கன்மம் கெடுதலால் கன்மநாசபுரம்; சூரியன் வழி பட்டதால் தலைஞாயிறு; பிறவிப்பிணி போக்கிப் பிறவாநெறி தருதலால் கருப்பறியலூர்; காழியைப் போன்று அவ்வூருக்கு மேற்கில் திகழ்தலால் மேலைக்காழி ஆகிய பெயர்களை உடையது. தேவாரத் திருப்பதிகங்களில் கருப்பறியலூர் என்ற பெயரே காணப்படுகிறது.

## கோயிலமைப்பு :

இயற்கை எழில்சான்ற இத்தலத்தின் நடுவே கிழக்குநோக்கி விளங்குகின்றது கோயில். மலைக்கோயிலுக்கு நேர் எதிரில் மூன்று நிலைக்கோபுரம் கோயிலை அணி செய்கிறது. சுவாமி கோவில் கோபுர வாயிலுக்கு நேரில் இல்லாமல் சிறிது வடக்கே

தள்ளி உள்ளது. கோபுர வாயிலைக் கடந்த உடன் அழகிய முன் மண்டபமும் உயர்ந்து தோன்றுகிறது. மண்டபத்தில் விநாயகர் நால்வர் திருவுருவங்கள் அழகுறத் திகழ்கின்றன.

சுவாமி சந்நிதியை அடைகின்றோம். குற்றம்பொறுத்தீசுவரர் சந்நிதியில் நம் மனம் குவிவதை உணரலாம். கோல்வளை நாயகியைத் தரிசிக்கின்றோம். மகா மண்டபத்தில் பஞ்சமூர்த்திகள் நடராஜர் திருவுருவங்கள் விளங்குகின்றன. நாரை வழிபட்ட கல் சிற்பத்தைக்கண்டு மகிழ்கின்றோம். கோயிலை வலம் வருகையில் கர்ப்பக்கிருகக் கோஷ்டங்களில் விநாயகர் தக்ஷிணாமூர்த்தி திருவுருவங்கள் உள்ளன. வானுற உயர்ந்து தோன்றும் மலைக்கோயில் நம்மைக் கவர்கின்றது. உமாமகேஸ்வரரும் சட்டைநாதரும் இம்மலையில் கோயில் கொண்டுள்ளனர். சுவாமிக்குச் சார்த்திய புனுகுச் சட்டத்தின் மணம் மலைக்கோயிலில் நிறைந்து கமழ்கிறது. மலைக்கோயிலில் ஏறி இறைவனை வழிபட்டு மீண்டும் வலம் வரும்போது தல விருட்சமாகிய ஜாதி முல்லையும் அதனடியில் ஆதிலிங்கமும் விளங்குகின்றன. வடபால் கோஷ்டத்தில் பிரமன் துர்க்கை அம்மன் திருவுருவங்கள் விளங்குகின்றன. சண்டிகேஸ்வரர் கோயில் தனியே உள்ளது.

## புராண வரலாறுகள் :

முனிவர்கள் வழிபட்டது : கயிலை மலைச்சாரலில் அழகியதொரு வனம். அவ்வனத்தில் செய்யும் தவம் அணுவளவாயினும் மேருமலைபோல அது வளர்ந்து பயன் தரும். அங்குள்ள தடாகத்தின் கரையில் அங்கிரஸ் கௌதமர், வாமதேவர், கபாலி முதலிய முனிவர்கள் செய்தற்கரிய தவம் செய்தனர். தவத்திற்கு மகிழ்ந்த பெருமான், அவர்கள்முன் தோன்றி 'பூலோகத்தில் பூரிகா வனத்தில் சென்று தவம் செய்தால் எல்லாச் சித்திகளையும் நீங்கள் அடையலாம்' என்றார். முனிவர்களும் அவ்வாறே தவம் செய்தனர். இறைவன் சுயம்புலிங்கத்தினின்று தோன்றி அம்முனிவர்களுக்குச் சிவகதி அளித்தருளினன்.

இராவணனைக் கொன்ற பாவந்தீர இராமர் சிவலிங்க பூசை செய்ய விரும்பினர். அனுமனைச் சிவலிங்கம் கொண்டுவரப் பணித்தார். அனுமன்வரக் காலந்தாழ்த்தமை கண்டு மணலால் இலிங்கம் அமைத்து வழிபட்டுக்கொண்டிருந்தார். அவ்வேளையில் சிவலிங்கத்தோடு வந்த அநுமன் அதனைக்கண்டு அம் மணல் இலிங்கத்தை அகற்றித் தான் கொண்டுவந்த

சிவலிங்கத்தைப் பிரதிட்டைசெய்ய முயற்சித்தான். மூர்ச்சையுற்றான். தான் செய்த குற்றந்தீர இறைவனை வழிபட்டு அருள் பெற்றான்.

## இராவணன் வழிபட்டது :

புலத்திய மாமுனிவர் மக்கட் பேறின்றி, கயிலை மலைச்சாரலில் இருந்து கடுந்தவம் இயற்றினார். பெருமான் அருள் செய்த படியே இத்தலத்திற்கு வந்து பெருமானை வழிபட்டார். அன்புக் கிரங்கிய பெருமான் அம்மையோடு தோன்றி அருள்பாலித்தார். பத்துத் தலைகளோடு குழந்தை பிறந்தது. இராவணன் எனப் பெயர் இட்டனர் பெற்றோர். இராவணன் கடுந்தவமியற்றி மிக்க வலிமை பெற்றான். புட்பக விமானத்தில் இலங்கை செல்லும் போது அவன் விமானம் தடைப்பட்டு நிற்பதைக்கண்டு கீழே இறங்கி வந்தான். சிவாலயத்தின்மீது விமானத்தின் நிழல் பட்டதால் இத்தடை ஏற்பட்டதென உணர்ந்தான். விநாயக நதியில் நீராடி இறைவனை வழிபட்டுத் துயர்நீங்கிக் கயிலை சென்றான். இராவணன் மகன் இந்திரசித்து சிவலிங்கத்தைப் பெயர்க்க முற்பட்டுக் களைத்து உயிர் துறந்தான். இராவணன் இந்திரசித்தின் குற்றம் பொறுத்து அவனுக்கு உயிர்ப் பிச்சை அளித்தருளுமாறு இரந்தான். இறைவனும் அவ்வாறே அருள் புரிந்தார். இறையருள் பெற்ற இராவணன் இந்திரசித்தோடு இலங்கை மாநகர் ஏகினன்.

## விசித்திராங்கன் வழிபட்டது :

சிந்துதேசத்தரசன் சுசரிதனின் மகன் விசித்திராங்கன். அவன் மனைவி பெயர் சுசீலை. அரசாட்சியை அமைச்சர்பால் ஒப்புவித்து மக்கட்பேறு குறித்து இருவரும் தலயாத்திரை புறப்பட்டனர். காசி முதலாகப் பல தலங்களையும் தரிசித்துக் கொண்டு திருப்புள்கூர்த் தலத்திலுள்ள ஒரு வேம்படியில் மனைவியுடன் அமர்ந்தான். நீவிர் அருகிலுள்ள பூதிகாவனம் சென்று விநாயக நதியில் நீராடி இறைவனை வழிபடுங்கள். கவலை ஒழியுமென்று ஒரு அசரீரி எழுந்தது. இருவரும் அவ்வாறே செய்தனர். பெருமான் அருள்பாலித்தார். சுசீலை மகப்பெற்றாள். இருவரும் மனம் மகிழ்ந்தனர். இத்தல ஆலயத் திருப்பணியை அழகுறச்செய்து தம் ஊருக்கு ஏகினர்.

## இரத்தினகிரி வரலாறு :

முன்னொரு காலத்தில் மேருமலையில் தேவர்கள் பலரும் கூடி இருந்தனர். ஆதிசேடன் அங்குவந்தான். அனைவரும் ஆதிசேடனை

புகழ்ந்து வரவேற்றனர். இதனைக் கண்டு பொறாத வாயுபகவான் பரிகசித்தான். இருவருக்கும்பகைமைஉண்டாயிற்று. ஆதிசேடன் படங்களால் மலைமுகட்டை மூடி வலிமை இருந்தால் அசைத்துப் பார் என்றான். வாயு பெரும் புயலாக மாறிவிட்டான். கடல் வறண்டது. மலைகள் தூசியாயின. ஆதிசேடன் சிறிது தன் படங்களை அகற்றினான். வாயு மலைச் சிகரங்களைப் பிய்த் தெறிந்தனன். அச்சிகரங்களில் ஒன்றே இரத்தினகிரியாகிய மலை. இம்மலை மேலுள்ள இறைவரை வணங்குவோர் எல்லா நலங்களும் பெறுவர்.

### தீர்த்தம் :

இத்தலத்தில் விநாயக தீர்த்தம், சூரிய தீர்த்தம், வசிட்ட தீர்த்தம், அனுமதீர்த்தம், நிட்பபுட்கரிணி, சங்கபுட்கரணி தீர்த்தம், பொற்றாமரை தீர்த்தம் செங்கழுநீர்த் தடாகம் என எட்டுத் தீர்த்தங்கள்உள்ளன.

விநாயக தீர்த்தம் — பழவாறு என வழங்கப்பெறும் இந் நதியே விநாயக தீர்த்தமாகும். அகத்தியரின் கமண்டலத்தில் அடங்கியிருந்த காவிரி நதியை விநாயகர் காக வடிவுகொண்டு கவிழ்த்தனர். அந்நதி ஆறாகப்பெருகி ஓடி வந்தது. இந்திரன் வேண்டுகோளுக்கு இணங்கி விநாயகர் கவிழ்த்து வரவிட்ட நதி யாதலின் விநாயகநதி எனப்பெயர் பெற்றது. சூரிய தீர்த்தம் — தக்கயாகத்திற்குச் சென்ற பாவத்தினால் பல்லிழந்த சூரியன் ஒளி குன்றினான். இத்தலத்திற்கு வந்து தீர்த்தமுண்டாக்கி அதில் நீராடி வழிபட்டு அருள்பெற்றான். சூரிய தீர்த்தத்தில் ஞாயிற்றுக் கிழமைகளில் நீராடுவது மிகச்சிறந்தது.

### மூர்த்திகள் :

இறைவர் திருப்பெயர் குற்றம் பொறுத்த நாதர். இறைவி திருப்பெயர் கோல்வளைநாயகி. சுந்தரர் இறைவியார் பெயரை தம் திருப்பாடலில் குறிப்பிட்டுப் பாடியுள்ளார். மற்றும் கர்ப்ப ஞானேசுவரர், கர்ப்பஞானபரமேசுவரி, சட்டைநாதர்திருவுருவங் களும் உள்ளன.

### தலபுராணம் :

தருமை ஆதீனம் 10-வது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகளின் அருள்பெற்ற மருதூர் அம்பலவாணர்என்ற புலவர் பாடிய தலபுராணம் உள்ளது.

**கல்வெட்டுக்கள் :**

இத்தலத்துக்குக் கல்வெட்டுக்கள் பன்னிரண்டு உள்ளன. இது மூன்றும் குலோத்துங்கன், கோநேரின்மை கொண்டான், இராசராசதேவர், பிரதாப கிருஷ்ணதேவராயர் முதலியோர் காலக் கல்வெட்டுக்களாகும்.

இவற்றிற் குறிப்பிடத் தகுந்த சில செய்திகள் :— III ஆம் குலோத்துங்க சோழன் காலத்தில் இத்தலம் தனிநாயகச் சதுர்வேதி மங்கலம் என்று பெயர் பெற்றது என்றும், இப்பெயரே சிதைந்து தலைஞாயிறு என வழங்குகிற தென்றும் கல்வெட்டுப் புலவர் திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்கள் கருதுவர். அருக்கனால் அருச்சிக்கப் பெற்றதாதலின் 'தலைஞாயிறு' எனப் பெயர் பெற்றதென்றலே பொருத்தமுடையதாகும். நமது முன்னோர் கொள்கைக்கும் இதுவே முரணின்றி முடியும். 'அகரம் தனியாக சதுர்வேதி மங்கலம்' என்று கல்வெட்டுக்கள் இவ்வூரைக் குறிப்பிடுகின்றன. அகரம் என்பது அந்தணர் வாழ்கின்ற இடமாகும். இப்படிக் கல்வெட்டுக்கள் கூறுவதற்கேற்ப இத்தலத்துப் பதிகமும் கூறுகின்றமை காண இஃது உண்மையாவதைத் தெளியலாம். பார்வதிபாகர் என்று பெருமான் குறிக்கப்பெறுகின்றார். ஊர்ச்சபை உறுப்பினராதற்குரிய சட்டதிட்டங்கள் இக்கோயில் வடபுறச் சுவரில் உள்ள கல்வெட்டில் காணப்படுகின்றன. இது அக்காலத் தமிழ் மக்கள் எவ்வாறு அரசியல் வாழ்வில் நேர்மையைக் கையாண்டு சீர்மை பெற்றிருந்தனர் என்பதை விளக்க உறுதுணை புரிவதாகும்.

**கோயில் அமைப்புக்களும் மன்னர்களும் :**

இக்கோயிலின் தூபியை சோழ குலத்தான் மங்களாதிராசர் என்பார் அமைத்தனர். III ம் குலோத்துங்கன் ஆட்சிக் காலத்தில் இவ்வறச் செயல் நிகழ்ந்தது. வில்லவரையர் என்பார் இக்கோயில் பள்ளியறை நாச்சியாரை எழுந்தருளப்பண்ணுவித்தார். திரிபுவனச் சக்கரவர்த்திகள் இராசராசதேவரின் ஆட்சிக் காலத்தில் திருஞானம் பெற்ற பிள்ளையார்க்குக் காலை சந்திக்கும், உச்சியம்போதுக்கும் திருவமுது படைத்தற்கு நிவந்தங்கள் இடப்பட்டன. இக்கோயிலை தொழவரும் அடியார்க்கும், திருவாதிரையில், ஆனந்த நடராச மூர்த்தியை எழுந்தருளப் பண்ணுவதற்குமாகவும் நிவந்தங்கள் அமைக்கப் பெற்றுள்ளன. மகாமண்டபம் எழுப்பப் பெற்றது. விக்கிரமசோழவேளார் என்ற விழுமிய சிவத்தொண்டரால் இவ்வண்ணம் கல்வெட்டுக்களினின்று இக்கோயில் அமைப்புக்குக் காரணமாக இருந்த

மன்னர்களைப்பற்றி அறியலாம். இவர்களது சிவபக்தியின் முகிழ்ச்சியாகவே இன்றைய சிவாலயம் நின்று நிலவுகிறது.

## 3. திருக்குரக்குக்கா

சோழ நாட்டில் காவிரியின் வடகரைத் தலங்களில் 28 ஆவது தலம். மாயூரமிருந்து மணல்மேடு செல்லும் சாலை அல்லது வைத்தீஸ்வரன் கோவிலிலிருந்து மணல்மேடு செல்லும் சாலையில் பட்டவர்த்தியென்னும் ஊரில் இறங்கி வடக்கே 2 கல் தூரம் சென்றால், இத்தலத்தை அடையலாம்.

### தலப் பெருமை :

பழவாற்றின் கரையில் விளங்கும் இத்தலம் அப்பர் சுவாமி களின் தேவாரத் திருப்பதிகம் ஒன்றைப் பெற்றுத் திகழ்கிறது, வடவாஞ்சார் என இவ்வூர் வழங்கப்படுகிறது

சோலை வளத்தால் பெயர்பெற்ற ஊர்கள் ஆனைக்கா, கோடிக்கா, கோலக்கா, நெல்லிக்கா, குரக்குக்கா என்பனவாகும். இவற்றைப் பஞ்ச காக்கள் என்பர். திருக்குரக்குக்கா – குரங்கு பூசை செய்த தலமாகும்.

### மூர்த்திகள் :

இறைவர் திருப்பெயர் – ஸ்ரீ குந்தளநாதேஸ்வரர். இறைவி திருப்பெயர் - ஸ்ரீ குந்தளநாயகி மற்றும் விநாயகர், ஆறுமுகப் பெருமான், தட்சிணாமூர்த்தி, மணிவாசகர், அநுமான், பைரவர், ஆகிய திருவுருவங்கள் உள்ளன. உற்சவ மூர்த்திகளில் சந்திர சேகரர், நடராஜர், முருகன், அநுமர், திருவுருவங்கள் உள்ளன.

### கோயிலமைப்பு :

பழவாற்றின் கரையில் கோயில் கிழக்கு நோக்கி அமைந்து திகழ்கிறது. திருப்பணிகள் பலவும் செய்து 14—6—70 ல் குடமுழுக்கு விழா செய்விக்கப் பெற்றுள்ளது. தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் அவர்களின் பெருங் கருணையாலும், அறநிலையத்துறையின் பேருதவியாலும், இளந் தோப்பு திரு. சோமசுந்தரம் பிள்ளை, திருப்புன்கூர் சுப்பையாப் பிள்ளை, இக்கோயிலின் பரம்பரைக் குருக்கள் சாம்பசிவ சிவாச்சாரியார் முதலியோரின் நன்முயற்சியாலும் பழுதடைந் திருந்த இத்திருக்கோயில் முழுமையான திருப்பணி பெற்று விளங்குகின்றது.

கோயிலுக்குள் நுழைந்தவுடன் நந்தி மண்டபமும் பலி பீடமும் விளங்குகின்றன. பிராகாரத்தின் அக்கினி மூலையில் மடைப்பள்ளி அமைந்துள்ளது. தெற்குப்பிராகாரத்தில் கர்ப்பக் கிருகக் கோஷ்டத்தில் தட்சிணாமூர்த்தி விளங்குகின்றார். மேற்குப் பிராகாரத்தில் பெரிய மண்டபம் அமைக்கப்பெற்றுள்ளது. இதனுள் விநாயகர், ஆறுமுகப்பெருமான் முதலிய மூர்த்திகள் எழுந்தருளி விளங்குகின்றனர். வடக்குப்பிராகாரத்தில் துர்க்கை, சண்டிகேஸ்வரர் கோயில்கள் உள்ளன. கோயிலுக்குள் சென்ற வுடன் மகாமண்டபத்தில் நின்று சுவாமி அம்பாளை வழிபடலாம். அப்பர்சுவாமிகள் பாடிய திருப்பதிகத்துள் இத்தலத்திறைவனை வழிபடுவார்க்கு இடர்களில்லை யெனவும், வினைகளும் பாவமும் இல்லை எனவும் ஓதியருளிய பதிகச் சிந்தனையை அங்குப் பதிக்கப் பெற்ற திருப்பதிகக் கல்வெட்டு உணர்த்துகின்றது. விநாயகர், அப்பர், அநுமார், பைரவர், சூரியன் திருவுருவங்கள் விளங்கு கின்றன.

## புராண வரலாறு :

இராமன் சீதையை மீட்க இலங்கைமீது படையெடுத்துச் சென்று இராவணன் கும்பகர்ணன் முதலியோரைக் கொன்று சீதாப் பிராட்டியை மீட்டுக்கொண்டு சேதுவுக்கு வந்தார். புலத்திய முனிவரின் மகனாகிய இராவணன் வேதபாரகன் ஆதலாலும், சிவபக்தன் ஆதலாலும் இராவணனைக் கொன்ற கொலைப்பழி இராமரைப் பற்றியது. அதனைப் போக்கிக் கொள்ளு தற்கு சிவலிங்கப் பூஜையே செய்யத்தக்கதாகுமென அறிந்து அநுமனை விளித்து 2 நாழிகைக்குள் ஒரு சிவலிங்கம் கொண்டு வருமாறு பணித்தார். அநுமன் வடதிசை நோக்கிச் சென்றான். நாழிகைக் கடப்பதைக் கண்ட இராமர் அங்கேயே மணலை இலிங்கமாகக் குவித்து வைத்து சிவபூசை செய்தார். பிரும்மகத்தி அகன்றது.

காலந்தாழ்த்திய அநுமன் இலிங்கத்துடன் ஓடிவந்தான். இராமன் தான் வருவதற்குள் இலிங்கம் அமைத்துப் பூசித்ததற்கு வருந்தினன். அவ்விலிங்கத்தை அகற்றித் தான் கொண்டுவந்த இலிங்கத்தை வைக்க விரும்பி தனது உடல் வலிமையைக் கருதி வாலினால் அவ்விலிங்கத்தைக் கட்டி இழுத்தான். அசைந்தபா டில்லை. அநுமன் மூச்சொடுங்கி சோர்ந்துவிழுந்தான். அதைக் கண்ட இராமர் மனம் நொந்தார். அநுமனைத் தூக்கித் தெளி வித்தார். சிவ அபராதம் நீங்குமாறு பூசை செய்யும்படி கூறினார். இத்தலத்திற்குவந்து அநுமன் தவம் செய்தான். தலைஞாயிறு

என்ற தலத்தில் அவள் பிழையைப் பொறுத்து குற்றம் தீர்த்து ஆட்கொண்டார் இறைவன். அருள்பெற்ற அநுமன் தன்பெயரால் குரக்குக்கா என்ற இத்தலத்தை அமைத்து தீர்த்தமும் உண்டாக்கி நீராடி வழிபட்டுச் சிவபதம்பெற்ருன். இத்தலத்தின் பெயர்க்குஏற்பவும் இப்புராண வரலாற்றுக்குப்பொருத்தமாகவும் இன்றும் ஆண்டுக்கு ஒருமுறை குரங்குகள்வந்து பூசித்துச் செல்லுகின்றன. கோடைகாலத்தில் சித்திரை, வைகாசி மாதங்களில் ஒருநாள் குரங்குகள் கோயிலுக்குள்வந்து மலர் பறித்து வலம்வந்து வழிபடுவது குறிப்பிடற்குரியதாகும்.

---

உ

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

இருபத்தாருவது குருமகாசந்நிதானம்

### ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்

## மாத ஜன்மநட்சத்திர வழிபாடு

நிகழும் நள ஆண்டு ஐப்பசித்திங்கள் 2-ஆம் நாள் (18—10—76) திங்கட்கிழமை ஆயில்ய நட்சத்திரத்தன்று திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கருப்பறியலூர் ஸ்ரீ கோல்வளை நாயகி உடனுகிய ஸ்ரீ குற்றம்பொறுத்தீசுவர சுவாமி தேவஸ்தானத்திலும், திருக்குரக்குக்கா ஸ்ரீ குந்தள நாயகி உடனுகிய ஸ்ரீ குந்தளநாதேசுவர சுவாமி திருக்கோயிலிலும் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பு வழிபாடு நடைபெறும். அவ்வமயம் "திருக்கருப்பறியலூர்–திருக்குரக்குக்காத் திருப்பதிகங்கள்" என்ற நூல் வெளியிட்டு வழங்கப்பெறுவதுடன் திருப்பதிகப் பாராயணமும் விரிவுரையும் நிகழ்த்தப்பெறும். அன்பர்கள் பலரும் வந்து வழிபாட்டில் கலந்துகொண்டு பயன்பெறுவார்களாக.

அன்று, ஆதீனப் பல்கலைக்கல்லூரி மாணவர்கள் உழவாரப்பணி செய்வார்கள்.

# செய்திகள்

## தருமை ஆதீனத்தில் ஸ்ரீ மகாலட்சுமி துர்க்கா தேவிக்கு 26-வது சதசண்டி வேள்வி விழா,

## கல்வி நிலையங்களின் கலைமகள் விழா

திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமையாதீனம் ஸ்ரீ அஷ்டா தசபுஜ மகாலட்சுமி துர்க்காதேவிக்கு வழக்கம்போல் இவ்வாண்டும் 24—9—1976 முதல் 2—10—1976 வரை 26வது சதசண்டி வேள்வியும், தருமை ஆதீன அருளாட்சியில் தழைத்து வரும் கல்வி நிலையங்களின் கலைமகள் விழாவும், தருமையாதீனம் 26வது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுளப்பாங்கின் வண்ணம் மிகச்சிறப்பாக நடந்தேறின.

ஸ்ரீ துர்க்காதேவி சந்நிதியில் அழகொளி ததும்ப அமைக்கப் பெற்றிருந்த வேள்வி மண்டபத்தில் யாக கலசங்கள் வைத்து அலங்கார ஆராதனைகள் செய்வித்து விழா நாட்களில் காலை மாலை இருவேளைகளிலும் உலகில் பசியும் பிணியும் நீங்கி வசியும் வளனும் சுரக்க வேண்டி சதசண்டிப் பெருவேள்வி வேத விற்பன்னர்களால் மிகச்சிறப்பாக நிகழ்த்தப்பெற்றது. நவராத்திரி விழா நாட்களில் சதசண்டி வேள்வியினை ஒட்டி சுவாசினி குமாரி, வடுபூஜை, நால்வேத பாராயணம் துர்க்கா சூக்த பாராயணம் பன்னிரு திருமுறைப்பாராயணம் அபிராமி அந்தாதி பாராயணம் ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காதேவிக்கு இலட்சார்ச்சனை அம்மை திருமுன்பு அமைந்திருக்கும் ஸ்ரீ வித்தியாசக்கரமாகிய மேருவிற்கு சகஸ்ரநாம அர்ச்சனை மற்றும் விசேட அபிடேக அலங்கார ஆராதனைகளும் மிகச்சிறப்பாக நடந்தேறின.

1—10—1976 சரஸ்வதி பூஜை திருநாளன்று நண்பகலில் சப்தசதிஹோமமும், மகா பூர்ணாகுதியும் நிகழ்வுற எட்டு நாட்களாக நடந்துவந்த சதசண்டி வேள்வி நிறைவேறிற்று. 2—10—1976 விஜயதசமி திருநாளன்று ஸ்ரீ துர்க்கா தேவிக்கு யாககலசாபிடேகமும் விசேட அலங்கார ஆராதனைகளும் நடைபெற்றன.

விழா நாட்களில் சதசண்டிவேள்விவழிபாட்டிற்குப் பின்னர் இரவில் ஆனந்ததாண்டவபுரம் பிரம்மஸ்ரீ பி. இராமதாச ஐயர் அவர்கள் பல்வேறு நாம ரூபங்களோடு பல தலங்களிலும் எழுந்தருளியிருந்து அருள்வழங்கும் அருள்மிகு சக்தித் தாயின்பெருமையினையும் பேரருளிப்பாடுகளையும் வடமொழியில் திகழும் அம்மையின் அருள் நூல்கள் பலவற்றின் துணையோடு, எல்லார் உள்ளங்களிலும் பதியுமாறு எளிமைப்பட எடுத்து விரித்துரை செய்தார்கள்.

தருமையாதீனம் 26-வது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஒவ்வோர் நாளும் காலைமாலை இருவேளைகளிலும் சதசண்டி வேள்விக்கு எழுந்தருளி வழிபாடாற்றி மாயூரத்திலிருந்தும், மற்றும் பல்வேறு இடங்களிலிருந்தும் வந்து வழிபாடாற்றிய அன்பர்களுக்கெல்லாம் பிரசாதங்கள் வழங்கி ஆசியருளினார்கள்.

24—9—1976 முதல் 2—10—1976 முடிய நவராத்திரி விழா நாட்களில் கலைமகள் அருள்வேண்டி ஆதீனக் கல்வி நிலையங்களின் சார்பில் கலைமகள்விழா நாள்தோறும் மாலை 3-மணிமுதல் 5-மணி வரை தருமையாதீனம் திருநெறியத் தெய்வத் தமிழ் மன்றத்தில் சிறப்பாக நடந்தேறியது. விழா நாட்களில் மாயூரம் மாவட்டப் பதிவாளர் திரு. இராமநாதன் பி ஏ. அவர்கள் தருமை ஆதீனப் புலவர் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம்.ஏ. அவர்கள், அ. வ. அ கல்லூரி தமிழ்த்துணைப் பேராசிரியர், டாக்டர் திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ. பி. எச்.டி. அவர்கள், மாயூரம் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அதிகாரி திரு. கோ. வே. இராமச்சந்திரன் அவர்கள், மாயூரம் கோட்டாட்சித் தலைவர் திரு பி. குமரப்பிள்ளை பி. எஸ்சி., அவர்கள், மாயூரம் நகராட்சி ஆணையர் திரு ஒ. சிவதாணு பி.ஏ., பி. எல். அவர்கள், மாயூரம் வழக்குரைஞர் திரு இ. ஆர். குஞ்சிதபாதம் ஐயர் பி. ஏ., பி. எல். அவர்கள், அண்ணாமலைப்பல்கலைக் கழகத் திருக்குறள் ஆராய்ச்சித்துறை மகாவித்துவான் தருமை ஆதீனப் புலவர் திரு. ச. தண்டபாணிதேசிகர் அவர்கள், தருமபுரம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர் நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. டி. விவேகானந்தம் பி ஏ பி டி அவர்கள் முதலிய பெருமக்கள் ஒவ்வோர் நாளும் முறையே சிறப்புரை ஆற்றி விழாவினைச் சிறப்பித்தனர்.

நவராத்திரி விழா நாட்களில் தமிழில்பேசப்பெறும் ஒன்பான் சுவைகளை ஆராய்வது பொருத்தம் என்ற நோக்கில் ஒவ்வோர் நாளும் ஒவ்வோர் சுவை பற்றிய விரிவுரை ஆதீனக் கல்வி நிலைய ஆசிரியப் பெருமக்களால் நிகழ்த்தப்பெற்றது.

ஆதீனப் பல்கலைக்கல்லூரி மாணவ - மாணவியர்கள் கலைமகள் விழாவில் தங்கள் கன்னிப் பேச்சை அரங்கேற்றி, நாவன்மை பெற்றுச் சிறக்க வேண்டுமென்ற ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் திருவுளப்பாங்கின் வண்ணம் கல்லூரி மாணவர் ஒருவரும், மாணவி ஒருவரும் நாள்தோறும் முறையே பெரிய புராணச் சீரடியார் அருள் வரலாற்றினையும், அம்மை மீதெழுந்த அருட்பாமாலைகளையும் விரித்துப் பேசினர்.

ஆதீனக் கல்வி நிலையங்களின் சார்பில் நாள்தோறும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. பலரும் இவ்விழாக்களில் பங்கேற்று கலைமகள் அருள்பெற்று உய்ந்தனர்.

## திருக்கோயில்களில் நவராத்திரி விழா

**வேளூரில் :**

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாத சுவாமி தேவஸ்தானத்தில் 24—9—76 முதல் 2—10—76 முடிய நவராத்திரி விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. நவராத்திரி விழாவில் உலக நலம் கருதி ஸ்ரீ தையல்நாயகி அம்பாளுக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகளுடன் லக்ஷார்ச்சனையும் சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

29—9—76 ஞாயிற்றுக்கிழமையன்று மாலை 6-மணியளவில் தருமையாதீனத் தமிழ்ப்புலவர், திருநெறிச்செம்மல், நல்லிசைப் புலவர், வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ. அவர்கள் ' மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் ' பற்றியும், 28—9—76 செவ்வாய்க்கிழமையன்று தருமையாதீனப் பல்கலைக்கல்லூரித் தமிழ்த்துணைப்பேராசிரியர், வித்துவான். திரு. மு. சிவச்சந்திரன் பி. ஏ , அவர்கள் ' அபிராமி அந்தாதி ' பற்றியும் உரையாற்றினர். அன்பர் பலர் வந்திருந்து அம்பிகையைத் தரிசித்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும் பயன் பெற்றனர்.

**சீகாழியில் :**

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீசட்டைநாதசுவாமி திருக்கோயிலில் நவராத்திரி விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. உலக நலம் கருதி ஸ்ரீ திருநிலைநாயகி அம்பாளுக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகளும் லக்ஷார்ச்சனையும் சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

24—9—76 வெள்ளியன்று மாலை 6-மணிக்குத் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர், புலவர். திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ. அவர்கள் 'அபிராமி அந்தாதி' பற்றியும், 26—9—76 ஞாயிறு அன்று தருமையாதீனத் தமிழ்க் கல்லூரிப் பேராசிரியை, வித்துவான், திருமதி. ப. நீலா எம். ஏ., அவர்கள் 'காந்திமதியம்மை பிள்ளைத்தமிழ்' பற்றியும் சொற்பொழிவு ஆற்றினர். அன்பர்கள் வந்திருந்து அம்பிகையைத் தரிசித்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும் பயன்பெற்றனர்.

## திருபுவனத்தில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் நவராத்திரி விழா 28—9—76 முதல் 2—10—76 முடிய உள்ள நாட்களில் மிகச் சிறப்புடன் நிகழ்வுற்றது. உலக நலங்கருதி ஸ்ரீ தர்மசம்வர்த்தினி அம்பாளுக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகளும் அருச்சனைகளும் சொற்பொழிவுகளும் நிகழ்வுற்றன.

26—9—76 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியளவில் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்த் துணைப் பேராசிரியர், வித்துவான். திரு. மு. சிவச்சந்திரன் பி. ஏ., அவர்கள் 'கொற்றவை வழிபாடு' பற்றியும் 28—9—76 செவ்வாயன்று தருமை ஆதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியை வித்துவான், திருமதி. ப. நீலா எம். ஏ., அவர்கள் 'மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்' பற்றியும் சொற்பொழிவு ஆற்றினர். அன்பர்கள் பலர் வந்திருந்து அம்பாளைத் தரிசித்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும் பயனுற்றனர்.

## திருப்பனந்தாளில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி திருக்கோயில் நவராத்திரி விழாவில் நாள்தோறும் உலகநலம்கருதி ஸ்ரீ பிருகந்நாயகி அம்பாளுக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகளும் அர்ச்சனையும் சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

26—9—76 ஞாயிறன்று மாலை 6 மணியளவில் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், புலவர், திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ., அவர்கள் 'கொற்றவை வழிபாடு' பற்றியும் தருமையாதீனத் தமிழ்ப் புலவர், தருமையாதீனப்

பல்கலைக் கல்லூரி முதல்வர், வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ., அவர்கள் ' அபிராமியம்மை பதிகம் ' பற்றியும் உரையாற்றினர். அன்பர்கள் பலர் வந்திருந்து அம்பாளைத் தரிசித்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும் பயனுற்றனர்.

**ஆதீனத் திருக்கோயில்களில் :**

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான தேவஸ்தானங்களாகிய திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ அபிராமி அம்மைக்கும் திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ தர்மசம்வர்த்தனி அம்மைக்கும், திருக்குவளை ஸ்ரீ தியாகராஜ சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ வண்டமரும் பூங்குழலம்மைக்கும், ஆச்சாள்புரத்தில் ஸ்ரீ சிவலோகத்தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ திருவெண்ணீற்றுமையம்மைக்கும், பேரளம் ஸ்ரீ சுயம்புநாதசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ பவானி அம்மைக்கும், குறுக்கை ஸ்ரீ வீரட்டேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ ஞானம்பிகை அம்மைக்கும் குத்தாலம் ஸ்ரீ உக்தவேதீசுவர சுவாமிதேவஸ்தானத்தில் ஸ்ரீ அரும்பன்னவனமுலை அம்மைக்கும் உலக நன்மைக்காக நவராத்திரி நாட்களில் விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகளும் அர்ச்சனையும் நடைபெற்றன.

இத்திருக்கோயில்களில் வித்துவான். திரு. கா. ம. கண்ணப்பன், வித்துவான். திரு. சுவர்ணகாளீசுவரன், புலவர். திரு. இரா. செல்வக்கணபதி, எம். ஏ. வித்துவான், திரு. மு. சிவச்சந்திரன், பி. ஏ. வித்துவான். திருமதி. ப. நீலா, எம். ஏ. தருமையாதீனப்புலவர், வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ. தருமையாதீனத் தமிழ்ப்புலவர், வித்துவான். சிரோமணி. திரு. வீ. சபேசன் ஆகியோரால் சரசுவதி அந்தாதி, அபிராமி அந்தாதி, நவராத்திரிச்சிறப்பு, திருவெண்ணீற்றுமை யம்மை பிள்ளைத்தமிழ், ' மலைமகள், அலைமகள், கலைமகள் ' என்ற தலைப்புக்களில் ஒவ்வொரு நாள் விரிவுரைகள் நிகழ்த்தப்பெற்றன. ஆங்காங்கும் அன்பர்கள் பலர்வந்து வழிபட்டும் விரிவுரைகளைக் கேட்டும் பயன் பெற்றனர்.

## ஸ்ரீ அருணந்திதேவர் குருபூஜை விழா

**தருமையாதீனத்தில் :**

அன்புநெறி, அறிவுநெறி என்று இறைவனை அடையும் நெறிகள் இரண்டனுள் அறிவு நெறியைச் சிறப்பாகச் சாத்திரத்தின் வழி விளக்கினோர் மெய்கண்டார் முதலிய சந்தானாசாரியர்

நால்வர் இவ்விரு திறத்து ஆசிரியர்களது நாட்களையும் சிறப்பாகக் கொண்டாடுதல் சைவ சமயிகள் அனைவர்க்கும் கடமையாகும். ஸ்ரீ மெய்கண்டார் அருளிய சிவஞான போதத்தின் விரிநூலாக, சிவஞான சித்தியார் என்ற அருமையான நூலை அருளியவர் சந்தானாசாரியருள் இரண்டாமவராகிய அருணந்தி தேவ நாயனார்.

இவரது குருபூஜை விழா தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் 22—9—76 அன்று சிறப்பாக நடைபெற்றது. சமயாசாரியர் சந்தானாசாரியர்களுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப் பெற்றன. மாலையில் தருமையாதீனத் தமிழ்ப் புலவர், திருநெறிச் செம்மல் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ. அவர்கள் ‘சிவஞான சித்தியார்’ என்பது பற்றியும், தருமபுரம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் வித்துவான். திரு. வே. கண்ணப்பன் அவர்கள் ‘இருபா இருபஃது’ என்பது பற்றியும் விரிவுரையாற்றினார்கள். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கி ஆசியருளினார்கள். பக்தர்கள் பலர் வழிபட்டுப் பயன் பெற்றனர்.

திருத்துறையூரில் :

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுளப்பாங்கின்வண்ணம் திருத்துறையூரில் திருவாவடுதுறை ஆதீன அருளாட்சியிலுள்ள ஸ்ரீ சிஷ்ட குருநாதேசுவரர் திருக்கோயிலிலும் ஸ்ரீ அருணந்தி தேவர் குருமூர்த்த ஆலயத்திலும் நண்பகல் சிறந்த முறையில் அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. பக்தர்கள் பலர் வழிபாட்டில் கலந்துகொண்டு வழிபட்டுப் பயன்பெற்றனர். அன்று மாலை ஸ்ரீ அருணந்திதேவர் குருமூர்த்த ஆலயத்தில் வழிபாடு நிகழ்த்திப் பிரசாதங்கள் வழங்கப்பெற்றன. மாலையில் ஸ்ரீ சிஷ்டகுருநாதேசுவரர் திருக்கோயிலில் தருமையாதீனத் தமிழ்ப்புலவர். வித்துவான். சிரோமணி, திரு. வி. சபேசன் அவர்கள் “அருணந்தி தேவர் அருள் நூல்கள்” என்பது பற்றியும் திருவதிகை வித்துவான். திரு ந. சண்முகதேசிகர் அவர்கள் அருணந்தி தேவர் அருள் வரலாறு” என்பது பற்றியும் விரிவுரையாற்றினார்கள். உள்ளூர் பெருமக்களும் திருவதிகையிலிருந்து திரு. சுப்பிரமணிய செட்டியார் முதலிய அன்பர்களும் வந்து விரிவுரைகளைக்கேட்டும் வழிபட்டும் பயன் பெற்றனர்.

## சென்னை தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா

சென்னை தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா 15—9—76 புதன்கிழமை மாலை நிலையன்றத்தில் நிகழ்த்தப்பெற்றது மத்திய தலைமை நீதி மன்ற வழக்குரைஞர் திரு. A. சுப்பிரமணிய அய்யர் அவர்கள் தலைமை வகித்தார்கள். செல்வ முத்துக்குமார சுவாமி திரு வுருவப்படத்திற்கு வழிபாடு செய்யப்பெற்றது. நிலைய ஓதுவார் திரு. எஸ். ஞானப்பிரகாசம் வேலூர்த் திருப்பதிகங்களைப் பாடினர். விழாத் தலைவர் "நமது இந்து சமயம் எல்லோரும் போற்றி வழிபாடு செய்து உய்யும் நெறியைக் காட்டுவது. இதன் அருமை பெருமைகளை உலகுக்கு எடுத்துக் காட்டும் பல்கலைக் கழகமாகத் தருமபுரம் ஆதீனம் விளங்குகிறது சமய நூல்களை வெளியிடு செய்து சமய அறிவைப் பரப்புகிறது. இந்த நிலையத்தின் மூலம் நாம் பயன் அடைகின்றோம். இந் நற்பணியில் மக்கள் திரண்டுவந்து பயன் பெறுவது இன்றி யமையாதது. இங்கு ஒவ்வொரு மாதமும் வழிபாடு சிறப்பாக நடத்தப் பெறுகிறது. இதனை நாம் எல்லோரும் எப்படி வழிபாடு செய்யவேண்டும் என்ற ஒரு நெறியைப் புகட்டுகிறது" என்று மிக உருக்கமாகக் கூறினர். வித்துவான். ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரை, நன்றியுரை களைக் கூறி கூட்டத்தை உடனிருந்து நிகழ்த்தினர்கள். பிரசாதங்கள் அன்பர்களுக்கு வழங்கப்பெற்றன. விழா இரவு 9 மணி அளவில் நிறைவுற்றது.

## மாதாந்திர சமயப்பிரசார வழிபாடு

சென்னை தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தின் மாதாந் திர சமயப்பிரசார வழிபாடு 26—9—76 ஞாயிற்றுக்கிழமை காலை சென்னை கீழ்ப்பாக்கம் ஸ்ரீ பாதாளபொன்னியம்மன் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ விநாயகருக்கு அர்ச்சனையும், ஸ்ரீ பொன்னியம்மனுக்கு முறைப்படி அபிஷேகமும் அர்ச்சனையும், செய்யப்பெற்றன. வழிபாட்டின்போது நிலைய ஓதுவார் திரு. S ஞானப்பிரகாசமும், திரு. N. இராமமூர்த்தி அய்யரும் அபிராமி அந்தாதியையும், மற்றும் திருமுறைப் பாடல்களையும் பாராயணம் செய்தனர்.

வழிபாட்டிற்குப்பின் சமயப்பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. சென்னை D. S. P. திரு P. V. வெங்கடேஸ்வரன் அவர்கள்

எல்லோரையும்வரவேற்றுப் பேசினார்கள். கூட்டத்தில் அருட்கவி ஸ்ரீ தேவி கருமாரிதாசர் அவர்கள் பேசுகையில் இம்மாதிரி நடைபெறும் வழிபாட்டுக் கூட்டங்களில் பக்தர்கள் பெருமளவில் கலந்துகொண்டு தேவியை வழிபட்டு பக்திப் பரவசத்தில் திளைக்க வேண்டும் என்றும், பலனை எதிர்பார்க்காமல் நாம் பக்திசெய்தால் பலன் தாமாகவே நம்மை வந்தடையும் என்றும், தருமை ஆதீனத்தால் இம்மாதிரி நடத்தப்படும் வழிபாட்டுக் கூட்டத்தில் கலந்துகொள்வதினால் பக்தியும், தரும உணர்வும், ஞானம் முதலியனவும் கிடைக்கின்றன என்றும் எடுத்துரைத்தார். இம்மாதிரி தெய்வத்தொண்டிற்கு நம்மை அர்ப்பணித்துக் கொண்டால் நமக்கு எந்தவிதமான இடையூறுகளும்வராது என்றும் கூறினர்.

பின்னர் மலைவையாவூர் சிம்மக்குரல் திரு. சீதாபதி அவர்கள் பேசுகையில் சமயப்பிரசார நிலைய சுவாமிகள் முன்னிலையில் நடைபெறும் இம்மாதிரி வழிபாடுகளில் பயபக்தியோடு கலந்து கொண்டால் எல்லா நன்மைகளையும் அடையலாம் என்று சொன்னர். கூட்டத்தின்முடிவில் நிலையசுவாமிகள் பேசிய பிறகு மேற்படி ஆலயத்தின் நிர்வாகத்தில் ஈடுபாடு கொண்டுள்ள சென்னை கார்ப்பரேஷன் முன்னள் கவுன்சிலர் திரு. கண்ணன் அவர்கள் நவராத்திரி விழாக் காலத்தில் தருமையாதீனத்தினால் ஏற்பாடுசெய்யப்பெற்று நடத்தப்பெறும் வழிபாடு ஒரு தனிமுக்கியத்துவம் பெற்றது என்றும் அதற்காக ஆதீனத்திற்கு நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்வதாகவும் கூறினர்.

## புரட்டாசி மாத ஜன்ம நட்சத்திர விழா

திருக்கயிலாயப் பரம்பரைத் தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களது மாத ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாளன்று 21—9—76 செவ்வாய்க்கிழமை ஆதீனத்திற்குச்சொந்தமான குறுக்கை ஸ்ரீஞானம்பிகை உடனுறை ஸ்ரீ விரட்டேசுவரசுவாமி திருக்கோயிலில் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பு வழிபாடு நடைபெற்றது. "திருக்குறுக்கைத் திருப்பதிகங்கள்" என்ற நூல் வெளியிட்டு வழங்கப் பெற்றது. திருப்பதிகப் பாராயணமும் விரிவுரையும் நிகழ்த்தப் பெற்றன. ஆதீனக் கல்லூரி மாணவர்கள் உழவாரப்பணி செய்தனர். அன்பர்கள் பலர் வழிபாட்டில் கலந்துகொண்டு வழிபட்டுப் பயன் பெற்றனர்.

# எதிர்காலம்


## ஜோதிஷம். திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.


( நளஹூ ஐப்பசிமீ 1வ முதல் 30வ முடிய )

(17—10—1976 முதல் 15—11—1976 முடிய)

ஸ்ரீ நளஹூ ஐப்பசிமீ 1வ பானுவாரம் பூச நக்ஷத்திரத்தில் தைதுலை கரணம் கூடிய காலத்தில் சூரியஉதயம் முதல் 4 நாழிகை 31 விநாடிக்கு துலா லக்னத்தில் ஸ்ரீ லோகரட்சகரான சூரிய பகவான் கன்னியா ராசியிலிருந்து துலாராசி சங்கிரமணமாக ஐப்பசி மாதப் பிரவேசம் செய்கிறார். அன்று நளஹூ துலா விஷு புண்ணியகாலமாகும். சங்கிரமணவாராதிபதி சூரியன் இரஸாதிபதியாகிறார். அதாவது இரஸவஸ்துவாகிய நெய், நல்லெண்ணை முதலிய எண்ணைகள், தேன் மற்றும் மதுரமான இரஸ பண்டங்கள் ஆகியவற்றின் உற்பத்திக்கு கர்த்தாவாகிறார். சூரியன் குஜன் இவர்களுக்கு இருபுறமும் சுபர்கள் இருப்பதால் இரஸ வஸ்துக்கள் உணவு தானியங்களின் விலைவாசி கட்டுப்பாடாகி மக்கள் தம் தேவைக்கு வேண்டிய அளவு எளிதில் பெற்று உய்வார்கள். லோகத்தில் சுபிட்சம் மேலிட்டு தேசங்களில் எங்கும் சமதர்மமான பரிபாலனம் நடந்து வரும்.' திருமடங்கள் ஆசாரிய பீடங்கள் தழைத்தோங்கும். தேவாலயங்களில் நித்தியம் ஆறுகால பூசைகள் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் பிரஜைகள் அனைவரும் தெய்வீகத் தன்மையுடன் உயர்ந்த வாழ்க்கை நடத்திவருவார்கள்.

## சூரிய கிரஹணம்

குறிப்பு:- ஸ்ரீநளஹூ ஐப்பசிமீ 7வ (23-10-76) சனிக்கிழமை அமாவாசை சித்திரை நக்ஷத்திரத்தில் சம்பவிப்பது. இராகு கிரஸ்த கிருஷ்ணவர்ண சூர்யோபராக புண்ணியகாலம் வாருண பர்வா. இந்தக் கிரஹணம் விழுப்புரத்துக்கு வடக்கே தெரியாது; அங்குப்புண்ணியகாலம் இல்லை. தென்பிராந்தியத்தில் கிரஹணம் தெரியும்.

| | ஸ்பரிஸம் | மோக்ஷம் | பிரமாணம் |
|---|---|---|---|
| தஞ்சாவூர் | 8-56 A. M. | 9-48 A. M. | சுமார் விசம் |
| மதுரை | 8-50 ,, | 9-55 ,, | ,, |
| கொழும்பு | 8-45 ,, | 9-11 ,, | 16 |

கிரஹணம் விட்ட பிறகு அன்றைய சிரார்த்தம் செய்யலாம். சித்திரை, சுவாதி, விசாகம் ¾ மிருகசீர்ஷம், அவிட்டம் நக்ஷத்திரங்களில் பிறந்தவர்கள் சாந்தி செய்துகொள்க. கிரஹண பலனாவது உலக நாடுகளில் மன்னர் ஆட்சிக்கு ஹீனம் ஆகும். ஜனநாயகத்துக்கு க்ஷேமம் ஏற்படும்.

## 1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

( சு. சே. சோ. லா. – லி. லு. லே. லோ. – அ. )

மேஷராசி 9 பாதங்களும் இம்மாதம் மிச்சிர பலனாக நடக்கும். பணவசதி குடும்பாபிவிருத்தி மேலாக இருந்துவரும். மேலோர் பெரியோர் பிரபலஸ்தர்களினால் அனுகூலங்கள் இருந்துவரும். முதல் வாரத்தில் சகலகாரியங்களிலும் வெற்றியை ஏற்படுத்திக் கொண்டிருக்கும். இடைப்பகுதியில் சாதாரண பலனாக இருந்துவரும். 23உ க்கு மேல் எல்லா விஷயங்களிலும் மனோவல்லமையை யளிக்கும். பிணி நீங்குவதாகி சுகம் தரும். குடும்பத்தினருக்கு சௌக்கியம் தரும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் கடமைகள் நடந்து கொண்டிருக்கும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

## 2. ரிஷபம் – கார்த்திகை ¾ – உரோகிணி – மிருகசீர்ஷம் ½

( இ. உள. ஏ. – ஓ. வ. வி. வு. – வே. வோ. )

ரிஷபராசி 9 பாதங்களும் இம்மாதம் சுபபலனாக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் திருப்திகரமான சூழ்நிலையும், சமயோஜித வருமானங்களும் இருந்துவரும். வித்துவத்துவம், கலை, எழுத்துத் துறையில் மேன்மைஸ்திதியை ஏற்படுத்தும். தார புத்திரர்களுக்கு சௌக்கிய பலன்தரும். இம்மாதம் பிற்பகுதியில் பெண்கள்வகை சுகவிருத்தியில் மகிழ்ச்சி, தனசேர்க்கை ஆகிய நற்பலன்கள் தரும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் தீவிர செயல் முறையைக்கடைபிடிப்பதால் அரிய காரிய சித்தியை உண்டுபண்ணும். செவ்வாய், புதன் சுபமாகும்.

## 3. மிதுனம் – மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை – புனர்பூசம் ¾

( கா. கி. – கு. க ங. ச்சா. – கே. கோ. ஹ )

மிதுனராசி 9 பாதங்களும் இம்மாதம் சுமார்பலனாக நடக்கும். குடும்ப பிரச்சினைகளைச் சரிசெய்யும் அளவிற்கு வருமானம்

இருந்துகொண்டிருக்கும். சகோதரருக்கு மனஸ்தாபம் ஒரு புறம் இருந்து ஒத்துழைப்புதராதவராகவும், பந்து அம்மான்கள் மிச்சிரமாகவும் தோன்றுவர். வயிற்றுக்கோளாறு அல்லது தன்ஸ்திரிக்கு கெற்பத்தில் வலி வந்து குணமாகும். பூமி, இயந்திரங்களில் வருமானம் இருப்பினும் திருப்தியற்ற பயனாக இருக்கும். ஞாயிற்றுக்கிழமைகளில் சூரியார்ச்சனை செய்துவர நலம் தரும். உத்தியோகத்தில் பேரந்தஸ்துடன் கடமை நிறைவேறும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

### 4. கடகம் – புனர்பூசம் $\frac{1}{4}$ – பூசம் – ஆயில்யம்

( ஹி. – ஹூ. ஹே. ஹோ. ட. – டி. டு. டே. டோ. )

கடகராசி 9 பாதங்களும் இம்மாதம் சுமார்பலனாக நடக்கும். தனகாரகனின் வலுவால் பண ஆதாயங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். சகோதரருக்கு வித்துவத்துவத்தில் மேன்மையும், பொருளாதாரமும் ஏற்படும். பந்து அம்மான்கள் அபிமானத்துடன் இருப்பார்கள். பூமியில் வாகனாதிகளில் புதிய ஏற்பாடுகள் துவங்கும். சரீரத்தில் மார்புவலி போன்ற அரிஷ்டம் காட்டி உடன் குணமாக்கும். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு அருச்சனை செய்ய நலம் தரும். தாம்பத்திய வாழ்வு சுமூகமாக நடக்கும். செய்தொழிலில் காரியங்கள் துரிதமாக செயல்பட்டு வரும். சனி ஞாயிறு சுபமாகும்.

### 5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் $\frac{1}{4}$

(ம. மி. மு. மெ. – மோ. ட. டி. டு. – டே. )

சிம்மராசி 9 பாதங்களும் இம்மாதம் சுப பலன் தரும். தனாதி சௌகரியங்களில் குறைவின்றி சுகம் தரும். சகோதரர்களுக்கு நலம் பல ஏற்படும். வாகனாதிகளின் சௌகரியம் இருந்துவரும். பசு பால் பாக்கியம் பெருகும். விவசாயத்தில் அபிவிருத்தி பலன் ஏற்படும். தார புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்து வரும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் வளமும் செல்வாக்கும் மிகும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

### 6. கன்னி – உத்திரம் $\frac{3}{4}$ – ஹஸ்தம் – சித்திரை $\frac{1}{2}$

( டோ. ப. பி. – பு. ஷ. ண. ட. – பே. போ. )

கன்னியாராசி 9 பாதங்களும் இம்மாதம் மிச்சிர பலனாக நடக்கும். குடும்பத்தில் போதிய பணவசதிகள் இருந்துவரும். சகோதரர்களின் சௌக்கியம் மேலாக இருந்துவரும். வித்துவத்துவம் கலைத்துறையில் போட்டியிருப்பினும் சிறு செலவுடன் சாதகபலன் தரும். புத்திரர் புத்திரிகளுக்கு கல்விக்கலைத்துறையில்

முன்னேற்றம் தரும். கல்யாணாதி சுப மங்களம் ஏற்படும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் கடின நிலைமையாக இருப்பினும் புத்தி சாதுர்யத்தால் செயல்பட்டு வரும். புதன் வியாழன் சுபமாகும்.

7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾
( ர. ரி. – ரு. ரே. ரோ. தா. – தி. து. தே. )

துலாராசி 9 பாதங்களும் இம்மாதம் சுப பலன் தரும். தன சௌகரியமும் குடும்ப நிலைமையில் நிம்மதியும் ஏற்படும். சகோதர முன்னேற்றத்திற்கும், பந்து அம்மான்களின் நலத்திற்கும் சமூக நன்மைக்கும் தியாகமான சில ஈடுபாடுகளை உண்டுபண்ணும். வித்துவத்துவம் கலைத்துறையில் மேன்மை ஸ்திதியையளிக்கும் பிதாவழி சொத்தில் ஓர் நற்பலன் தரும். செய்தொழிலில் அலுவல் சுமந்து இருப்பினும் புத்தி சாதுரியத்தால் விரைவாக செயல்பட்டுக்கொண்டிருக்கும். வெள்ளி, சனி சுபமாகும்.

8. விருச்சிகம் – விசாகம்¼ – அனுஷம் – கேட்டை.
( தோ. – ந. நி. நு. நெ. – நோ. ய. யி. யு. )

விருச்சகராசி 9 பாதங்களும் இம்மாதம் சுமார் பலனை நடக்கும். குடும்பத்தில் போதிய பண வசதிகள் இருந்துவரும். சகோதரர் பெற்றோர் சம்பந்தமாக ஓர் பொருட் செலவும் ஏற்படும். வித்துவத்துவம் கலைத்துறையில் செலவுடன் மேன்மையளிக்கும். தாம்பத்திய வாழ்வில் மகிழ்ச்சி நிலவும். புத்திரர் பௌத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். பந்து அம்மான்களின் மனக்குறைகள் ஏற்படுவதும் சரிசெய்யும் நிலைமையும் ஆகும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் மாறுதல் பிரச்சினை எழும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

9. தனுசு – மூலம் – பூராடம் – உத்திராடம் ¼
( யே. யோ. பா. பி. – பு. த. ப. ட. – பே. )

தனுர்ராசி 9 பாதங்களும் இம்மாதம் சுமார் பலனைஇருக்கும். குடும்பாபிவிருத்தியில் சிரமம் தோன்றினும் பொருள் வரவு ஏற்பட்டுக்கொண்டிருக்கும். சகோதரர்கள் நலமாகவும் விசுவாசமாகவும் இருந்து வருவார்கள். வித்துவத்துவம் கலை எழுத்துத்துறையில் நற்பலன் தரும். மாதாவுக்கு தேக ஜாட்டியம் வந்து குணமாகும். புத்திரர்களுக்கு நூதன இயந்திர தொழில்களில் ஞானத்தைக் கொடுக்கும். மனைவி வழி பொருள் பிராப்தி இருப்பினும் அவ்வகையிலும் வியாஜ்ஜிய வழக்குகளிலும் பொருட்

செலவாக இருந்துவரும். செய்தொழிலில் கண்யம் தரும். செவ்வாய் புதன் சுபமாகும்.

### 10. மகரம் – உத்திராடம் $\frac{3}{4}$ – திருவோணம் – அவிட்டம் $\frac{1}{2}$

( போ. ஜ. ஜி. – கி. கு. கே. கோ. – கா. கி. )

மகரராசி 9 பாதங்களும் இம்மாதம் சுப பலன் தரும். குடும்பத்தில் போதிய தன வசதியும் சௌகரியங்களும் இருந்துவரும் சகோதரருக்கு அரசாங்க விருது பெறும் வாய்ப்பு ஏற்படும். வித்தியா வியாபாரம் கலைத்துறையில் முன்னேற்றம் ஏற்படும். பூமி இயந்திர வகையில் நற்பலன் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். ஸ்திரி வழியில் திரவியபிராப்தியும் சகாயங்களும் இருந்துவரும். புத்திரர்களுக்கு சௌக்கியம்தரும். செய்தொழிலில் ஆதாயம் வரும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

### 11. கும்பம் – அவிட்டம் $\frac{1}{2}$ – சதயம் – பூரட்டாதி $\frac{3}{4}$

( கு. கே. – கோ. ஸ. ஸி. ஸு. – ஸே. ஸோ. த. )

கும்பராசி 9 பாதங்களும் இம்மாதம் மிச்சிரபலனாக நடந்துவரும். தனச்செலாவணி சீராக இருப்பினும் குடும்ப சம்பிரதாயங்கள் யாவும் தடங்கலின்றி நடந்துவரும். சகோதர நலம் மேலாக இருந்துவரும். வாகன வசதி, பசு பால் கறவை, தேக ஆரோக்கியம் நன்றாக இருந்து வரும். குலதெய்வத்திற்கு பூசை செய்வதால் தாம்பத்திய வாழ்வில் உள்ள வியாகூலம் நீங்கும். மனத்தெளிவு ஏற்படும். பிரபலஸ்தர்களால் நன்மதிப்பும் சௌகர்யங்களும் ஏற்படும். ஜீவனோபாய வசதிகள் திருப்திகரமாக இருந்துகொண்டிருக்கும். சனி, ஞாயிறு சுபமாகும்.

### 12. மீனம் – பூரட்டாதி $\frac{1}{4}$ – உத்திரட்டாதி – ரேவதி.

( தி. து. ஸ. ச. த. – தே. தோ. ச. சி. )

மீனராசி 9 பாதங்களும் இம்மாதம் மிச்சிரபலனாக நடக்கும். பண வரவு எவ்வளவு இருப்பினும் முன்செலவுகளும் அமைதியின்மையுமாக இருக்கும். சகோதர சுகம், வாகன சௌகரியம் நன்றாக இருந்து வரும். கணவன் மனைவியின் வாழ்வில் சுமுகம் நிலவும். ஆயினும் தனக்கோ, தன் புத்திரனுக்கோ கண்ட சம்பவம் வந்து தப்பும். ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிக்கு அருச்சனை செய்ய நலம் தரும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் எதிர்ப்பிருப்பினும் தெய்வபலத்தினால் காரியங்கள் நிறைவேறும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

# வானங்காள் பெய்க! மழை

( வி. சா. கு. )

உலகம் வாழ்வதற்கு மழை இன்றியமையாதது. அம்மழை கடவுளின் கருணையால் பெறுதற்குரியதாகும். நம் முயற்சியால் பெரும் பொருட் செலவில் செயற்கை முறையில் பெய்விக்கும் மழை எல்லா உலகமும் பயன்பெற முழு அளவில் உதவ இயலாத நிலையில் இருப்பதைக் காண்கிறோம். தெய்வப் புலவர் திருவள்ளுவர் உலகப் பொதுமறையாக இயற்றியருளிய திருக்குறளில் கடவுள் வாழ்த்திற்கு அடுத்த அதிகாரமாக வான் சிறப்பினை வைத்துள்ளமை அறிதற்குரியதாகும்.

'வான் சிறப்'பில் வள்ளுவர் மழையின் சிறப்பினை விளக்குகின்றார். உலகில் உயிர்களை நிலைபெறச் செய்யும் மழை அமிழ்தத்திற்கு ஒப்பானதாகும். அம்மழை உணவுப் பொருள்களை நமக்கு உண்டாக்கித்தந்து தானும் உணவாகப் பயன்படுகிறது. மழை பெய்யாது பொய்க்குமானால் உலகில் பஞ்சம் உண்டாகும். உழவர்களின் உழவுத் தொழில் நிகழாது. வளங்கள் பலவற்றை நமக்குக் கொடுப்பது மழையே. பெய்யாது அவற்றைக் கெடுப்பதும் மழையேயாகும். மழை இல்லையானால் பசும்புல்லும் நிலத்தில் தோன்றாது. கடலும் வளம் குன்றும். கோயில்களில் நாள் வழிபாடு சிறப்பு வழிபாடுகள் நிகழா; உயிர் வாழ்க்கைக்குத்தண்ணீர் இன்றியமையாதது. அத்தண்ணீரைப் பெறுதற்கு மழை இன்றியமையாதது' என்ற கருத்துக்கள் திருக்குறள் வான் சிறப்பில் கூறப்படுகின்றன.

அருளாளர்கள் இறைவனிடம் உலக நலங்கருதி வேண்டும் வரங்களில் நாடு செழிப்புறுதற்கு மழையையே வேண்டி வழிபடுவதைக் காணலாம். திருஞான சம்பந்தர் அருளிய,

"வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே"

என்ற திருப்பாசுரம் சிறந்த வாழ்த்தாகத் தேவாரத் திருமுறையில் விளங்குகின்றது.

திருநாவுக்கரசு சுவாமிகள் இறைவனே மழை வடிவாக இருந்து உயிர்களை வாழ்விக்கின்றான் என்று அருளிச் செய்கின்றார்.

"பாரவன்காண்! பாரதனில் பயிரானான் காண்!
பயிர்வளர்க்கும் துளிஅவன் காண்! துளியில்நின்ற
நீர்அவன்காண்"

என்பது அப்பர் அருளிய திருப்பாடற் பகுதியாகும்.

உலகில் மழை இல்லாதபோது மக்கள் இறைவனையே மழை வேண்டி வழிபடுகின்றனர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்புன்கூருக்கு எழுந்தருளியபோது மக்கள் வேண்டுகோட் படிப் பதிகம்பாடி மழை வளம் பெற்றமையை அவர்தம் வரலாற்றில் காண்கிறோம். மழை பெய்வித்தற்கும், பெய்த பெருமழையை நிற்பித்தற்கும் அவ்வூர் மக்கள் இருமுறை பன்னிருவேலி நிலங்கள் வழங்கியுள்ளமையைச் சுந்தரர் திருப் பாட்டு காட்டுகிறது.

வையகம் முற்றும் மாமழை மறந்து
வயலில் நீரிலை மாநிலம் தருகோம்
உய்யக் கொள்க மற்று எங்களை என்ன
ஒலிகொள் வெண்முகி லாய்ப்பரந் தெங்கும்
பெய்யும் மாமழை பெருவெள்ளம் தவிர்த்துப்
பெயர்த்தும் பன்னிரு வேலி கொண்டருளும்
செய்கை கண்டு நின் திருவடி அடைந்தேன்
செழும் பொழில்திருப் புன்கூர் உளானே.

என்பது சுந்தரர் அருளிய தேவாரம்.

நாட்டில் மழை வளம் பெருகிப் பயிர்வளம் சிறந்திடப் பாவை பாடியருளியவர் மணிவாசகர். அம்பிகை அன்பர்க்கு அருள் வழங்கிடல் போல் மழை பொழிவதாகுக என வேண்டிப் பாடு கின்றார் அவர்.

"நம்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்!"

என்பது திருவெம்பாவை.

திருக்கோயில் வழிபாடுகள் வழுவின்றி நடந்தால்தான் மழைவளம் பெருகும். இல்லையேல் மழைவளம் சுருங்கும் என்று கூறுகிறார் திருமூலர்.

"முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரிவளம் குன்றும்"

என்பது திருமூலர் திருவாக்கு. மழையே மன்னவர்க்கும் விண்ணவர்க்கும் அமுது என்கிறது திருவிளையாடற் புராணம். "வான் முகில் வழாது பெய்க; மலிவளம் சுரக்க; மன்னன் கோன் முறை அரசு செய்க; குறைவிலாது உயிர்கள் வாழ்க; நான்மறை அறங்கள் ஓங்க; நற்றவம் வேள்வி மல்க; மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்" என்று வாழ்த்துகிறது கந்த புராணம். இத்தகைய மழையினை,

"மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்"

என்று வாழ்த்திச் சிலப்பதிகாரம் தொடங்குகின்றார் இளங்கோ அடிகள். 'மழையின்றி மாநிலத்தார்க்கில்லை மழையும் தவமிலார் இல்வழி இல்லை' என்கிறது நான்மணிக்கடிகை. மழைக்குக் காரணம் மாதவர் நோன்பும் மடவார் கற்பும் செங்கோன்மையுமே யாகும் என்கின்றன நீதி நூல்கள். 'வானம் பொய்யாது மழை பிழைப்பறியாது...... பத்தினிப் பெண்டிர் இருந்த நாடு' எனக் கவுந்தியடிகள் கற்பின் பெருமையை விளக்குகின்றார்.

"தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

"முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல்"

என்பன வள்ளுவர் குறள் மணிகள். மணிமேகலையில்,

"கோல்நிலை திரிந்திடில் கோள்நிலை திரியும்
கோள்நிலை திரிந்திடின் மாரி வறங்கூரும்"

என்று கூறுவர் சீத்தலைச்சாத்தனார். அக்காலத்தில் மன்னர்கள் அரசவையில் அமைச்சர்களைக் கேட்கும் முதல் கேள்வி மாதம் மும்மாரி மழை பெய்கின்றதா? என்பதாகும். மழை பெய்வதையே தங்கள் ஆட்சியின் நேர்மைக்கு அளவுகோலாகக் கொண்டனர் அக்கால மன்னர்கள்.

'வேதம் ஓதிய வேதியர்க்கு ஓர் மழை
நீதி மன்னர் நெறியினுக்கு ஓர் மழை
மாது கற்புடை மங்கையர்க்கு ஓர் மழை
மாதம் மூன்று மழையெனப் பொழியுமே'

என்பது விவேக சிந்தாமணி.

நாட்டில் மழைவளங் குறையும் காலங்களில் மக்கள் தெய்வப் பிரார்த்தனை செய்வர். 'நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை' என்ற பாடலை மனத்துட்கொண்டு எங்கள் ஊரில் கொடும்பாவிகள் இல்லை என்றறிவிக்கும் வகையில் கொடும்பாவி கட்டி அவ்வுருவத்தை வீதியில் இழுத்துச்சென்று ஊர் எல்லையில் போடும் வழக்கு உண்டாயிற்று. மழைத் தெய்வங்களாகிய மாரியம்மை, செல்லி யம்மை வழிபாடுகள் ஏற்பட்டன. பாரதம்ஓதும் வழக்கும்உண்டா யிற்று.

தஞ்சைத் தரணியில் ஒருமுறை மழைவளம் குன்றிப் பயிர்கள் வாடி மக்கள் அல்லற்பட நேர்ந்தபோது சோழநாட்டு மக்கள் தங்கள் சமயத் தலைவராக விளங்கிய தருமையாதீனம் 15 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக சுவாமிகளிடம் வந்து முறையிட்டார்கள். மகாசந்நிதானம் அவர்கள் சொக்கநாதப் பெருமானுக்குச் சிறப்பு வழிபாடுகள் நிகழ்த்தித் தங்களுக்குச் சிறப்பாகக் கைவந்த சாரங்கி என்னும் வாத்தியத்தை வாசித்துக்கொண்டு மேகராகக் குறிஞ்சிப் பண்ணில் அமைந்த திருவையாற்றுத் தேவாரத் திருப்பதிக மாகிய "புலனைந்தும் பொறிகலங்கி" என்ற பதிகத்தைப் பாடி யருளினார்கள். சிறிது நேரத்திற்கெல்லாம் வானம் கறுத்துப் பெருமழை பொழியத் தொடங்கியது. மக்கள் பெருமகிழ்வுற்றுத் திருமுறைகளின் பெருமைகளையும் குருமூர்த்திகளின் அருளாற் றலையும் வியந்து போற்றி மகிழ்ந்தனர். அதுமுதல் மழைவளம் வேண்டும் காலங்களில் மேகராகக் குறிஞ்சிப் பண்களைப் பாடும் மரபு சமய உலகில் உண்டாயிற்று.

தருமையாதீன ஞானபீடத்தில் பதினன்காவது குருமகா சந்நிதானமாக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ கந்தப்பதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆதீனத்துக்குச் சொந்தமான இடங் களைப் பார்வையிடுதற்கும், சிவதலங்களைத்தரிசித்தற்கும் தக்ஷிண யாத்திரை மேற்கொண்டு திருநெல்வேலி சிந்துபூந்துறைத் திருமடத்தில் எழுந்தருளியிருந்தார்கள் அப்பகுதிகளில் மழை யில்லாமல் குடிமக்கள் வருந்தியிருக்கும் காலம். அரசாங்க

அதிகாரிகள் குடிமக்களை வருத்தி வரிவசூல் செய்கின்றனர். குடிமக்கள் மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த வெள்ளையர் ஒருவரிடம் சென்று மழை இல்லாமையால் விளைவில்லை. வரி செலுத்துவது எவ்வாறு? என முறையிட்டனர். துரை என்னிடம் சொல்லி என்ன பயன்! உங்கள் பாதிரியார் (ஆசாரியர்) வந்திருக்கிறாரே! அவர்களிடம் சொல்லி மழை பெய்யும்படிச் செய்வதுதானே? என ஏளனமாக உரைத்தார். குடிமக்கள் மழையில்லாத வருத்தம் ஒருபுறம், துரை கூறிய குருநிந்தை உரை ஒருபுறம் தங்களைவருத்த திருமடத்துக்குவந்து ஞானதேசிகரிடம் நடந்ததையெல்லாம் தெரிவித்தார்கள். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீ சொக்கநாதப்பெருமானைப் பூசித்துத் தியானம் செய்து,

சைவ சமயம் சமயமெனில் அச்சமயத்
தெய்வம் பிறைசூடும் தெய்வமெனில் — ஐவரைவென்(று)
ஆனந்த வெள்ளத்(து) அழுந்துவதே முத்தியெனில்
வானங்காள் பெய்க மழை.

என்ற திருப்பாடலை அருளிச்செய்தார்கள். இப்பாடல் குருமூர்த்திகள் திருவாயிலிருந்து வெளிவந்தவுடன் மேகங்கள் திரண்டன; கறுத்தன; பெருமழை பெய்தன. ஏரி குளம் ஆறு அனைத்தும் நிரம்பின. உயிர்கள் யாவும் மகிழ்ச்சியுற்றன. பரிகசித்த வெள்ளைத்துரை குருமூர்த்திகளின் பெருமையை அறிந்து செய்தபிழைக்கு வருந்தி சொக்கநாதப்பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தும்படி நூறுவராகன் பொன்னைக் காணிக்கையாக்கி வணங்கினர் என்பது வரலாறு.

நாடு மழையின்றி வருந்தும் இக்காலத்தில் நாமும் இறையருளைப்போற்றி வானங்காள் பெய்கமழை! என வாழ்த்துவோம்.

---

## குருமணியின் அருள்மொழி

தெய்வ நம்பிக்கையும், பக்தி உணர்வும் மனிதனை மேலும் மேலும் உயர்த்துவன. அஸ்திவாரமில்லாத கட்டிடம்; ஊற்றுக்கண் இல்லாத கிணறு; மணமில்லாத மலர் சிறப்படையமுடியுமா? அதுபோலக் கடவுள் உணர்வில்லாத வாழ்வு எவ்வாறு சிறப்புறும்?

### சந்தானாசாரியர் நால்வருள் முதல்வராகிய

## ஸ்ரீ மெய்கண்டதேவநாயனர் குருபூஜை விழா

சைவ - சித்தாந்த சாத்திரங்களின் தலைமணி நூலாகிய சிவஞானபோதத்தை அருளிச் செய்து, சந்தானாசாரியருள் முதல்வராகத் திகழும் ஸ்ரீ மெய்கண்ட தேவ நாயனர் குருபூஜை விழா நிகழும் நள ஆண்டு ஐப்பசித் திங்கள் 8 ஆம் நாள் சுவாதி விண்மீன்கூடிய 24—10—76 ஞாயிற்றுக்கிழமை அன்று வருகிறது.

இவ்விழாவை ஒட்டி, தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ மெய்கண்டாருக்கும், மெய்கண்டதேவரின் திருஅவதாரத் தலமாகிய திருப்பெண்ணாகடம் களப்பாளர்மேட்டில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ மெய்கண்டாருக்கும், மெய்கண்டாருக்குச் சிவஞானம் கைவரப்பெற்றதும், அவர் முத்திப்பேறெய்தியதுமாகிய திருவெண்ணெய்நல்லூரில், திருவாவடுதுறை ஆதீன அருளாட்சியில் உள்ள மெய்கண்டார் ஆலயத்தில் உள்ள ஸ்ரீ மெய்கண்டதேவ நாயனருக்கும் தருமை ஆதீனத்தின் சார்பில் விசேட அபிடேக ஆராதனைகளும் சொற்பொழிவுகளும் சிறப்புற நிகழும். சிதம்பரம் கனகசபை நகரின்கண் அமைந்துள்ள ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருமடத்திலும், தில்லைத் திருமுறைக் கழகத்தின் சார்பில் குருபூஜை விழாச் சொற்பொழிவுகள் நடைபெறும்.

சைவ - மெய்யன்பர்கள் ஸ்ரீ மெய்கண்டாரின் குருபூஜைத் திருநாளைத் தத்தம் இல்லங்களில் கொண்டாடுவதோடு, வாய்ப்புடையவர்கள் மேற்கண்ட தலங்களில் நிகழும் குருபூஜை விழாக்களில் பங்கேற்று ஸ்ரீ மெய்கண்டாரை வழிபட்டுத் திருவருளும்—குருவருளும் பெற்று உய்வார்களாக.

## இரண்டுங்கெட்டான்

நன்மை - தீமை என்ற இரண்டில் எந்த ஒன்றின் மாட்டும் முழுதும் பற்றில்லாதவர்களை இரண்டுங்கெட்டான் என்பது வழக்கு. ஒன்றிலும் பற்றில்லாத இவர்கள் நன்மை பக்கம் சார்ந்தால் நன்மை செய்யத்தலைப்படுவர்; தீமைபக்கம் சார்ந்தால் நன்மையை மறந்து தீமையையே செய்து நிற்பர். தமக்கென ஓர் இயல்பின்றி எந்த ஒன்றிலும் உறுதியான பிடிப்பில்லாதாரை இரண்டுங்கெட்டான் என உலகினர் விளிப்பர். இவ்வழக்குச் சொல் நமது சைவ சமய தோத்திரங்களும் சாத்திரங்களும் வழங்கிய கொடை என்பது பலருக்குத் தெரிந்திருக்காது.

இறை - உயிர் - தளை என்பன சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள். இறைவன் அறிவாகிய ஒளி வடிவானவன்; தளை அறியாமையாகிய இருள் வடிவினது: இவ்விரண்டுக்கும் இடைப் பட்ட உயிர்கள் தமக்கென ஒரு தன்மையில்லாது பேரொளிப் பிழம்பாகவும் - பேரறிவுவடிவாகவும் இருக்கும் இறைவனைச் சாரும்போது ஒளியும் அறிவும் பூண்டும், இருளே உருவாகவும், அறியாமை வடிவாகவும் இருக்கும் தளையினைச் சாரும்போது இருண்டும் அறியாமை பூண்டும் நின்று, ஒன்றிலும் தோய்த லில்லாது நிற்றலின் உயிர் இரண்டுங்கெட்டான் எனப்படுகிறது.

இதனை மாணிக்கவாசகர் தமது திருச்சதகப் பகுதியுள் குறிக்கும்போது "இரண்டுமிலித் தனியன்" என்று குறிப்பித்தார். முழுதும் சத்தாகியதன்மையும், முழுதும் அசத்தாகிய தன்மையும் இல்லாது சதசத்தாயிருக்கின்ற தனித்தன்மை உடையது என்று உயிர்இயல்பினை இத்தொடர் குறித்தது.

சாத்திர ஆசிரியராகியமெய்கண்டார் 'இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா' என உயிர் இயல்பினைச் சிவஞானபோத ஏழாஞ் சூத்திரத்தில் குறித்தனர். அறிவாகிய இறையையும் - அறிவற்றதாகிய தளையையும் அறியும் அறிவு உடையது உயிர். ஆயின், இவ்வுயிர் சத்தாகிய இறையுமன்று. அசத்தாகிய தளையு மன்று. சதசத்தாகும் என்பது இவ்வரியின் விளக்கம்.

இரண்டிலும் பற்றில்லாத இவ்வுயிர்பற்றிய சாத்திர தோத்திரக் குறிப்பே - இரண்டுங்கெட்டான் என உலகியல் வழக்காயிற்று என்று எண்ண இடமுண்டு.

---

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam, Sirkali.

I am greatly impressed by the cleanliness, maintained in the temple and the care with which pujas are celebrated by the staff. Efficiensstly supervised by the Superintendent.

(Sd.) D. Narayanaswamy I. P. S.
Superintendent of Police,
Food cell C. I. D. Thanjavur

சிறுவர்களுக்கு:

## உங்கள் திறமைக்கோர் சோதனை !

( வி. சா. கு. )

### 1. வெள்ளரிக்காய்க் கணக்கு

ஒரு தலையாரிக்கு மூன்று மனைவியர். அவர்கட்கு ஒவ்வோர் பிள்ளைகள். தலையாரி கிராமத் தோட்டத்திற்குச் சென்று வெள்ளரிக்காய்கள் வாங்கி வைத்திருந்தான். மூத்தாள் மற்றவர்க்குத்தெரியாமல் தன்பிள்ளைக்கு ஒருகாய் எடுத்துக்கொடுத்து எஞ்சியதை மூன்று பங்காக்கித் தான் ஒரு பங்குகொண்டு போனாள். இரண்டாம் மனைவியும் அவ்வாறே செய்தாள். மூன்றும் மனைவியும் அவ்வாறே செய்தாள். தலையாரி எஞ்சிய காய்களைச் சரியாய்ப்பகிர்ந்து மூவர்க்கும் கொடுத்தான். தலையாரி கொண்டுவந்த காய்கள் எத்தனை ?

### 2. எலுமிச்சம்பழக் கணக்கு

வரதாபுரம் என்றொரு நகரம். அந்நகரில் செல்வன் ஒருவன். அவன் தன் ஏவலனை அழைத்துத் தோட்டத்துக்குச் சென்று ஒரு எலுமிச்சம்பழம் பறித்து வருமாறு சொல்கின்றான். தோட்டத்திற்கு 6 வாயில்களை ஒன்றன்பின் ஒன்றாகக் கடந்து செல்ல வேண்டும். ஒவ்வோர் வாயிற் காவலனும் கொண்டு வருவதில் தனக்குப்பாதி கேட்கின்றனர். அவ்வாறே தருவதாய் உடன்பட்டுச் சென்ற ஏவலன் எத்தனைப் பழங்கள் பறித்திருந்தால் ஒரு பழமே மீதி எடுத்துச் சென்றிருப்பான் ?

( விடை அடுத்த இதழில் காணலாம். )

---

( அட்டையின் 3-ஆவது பக்கத் தொடர்ச்சி )

10—11—76 புதன், துலா உத்ஸவ 5 ஆம் திருநாள். தருமை 22 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாணிக்க வாசகதேசிக சுவாமிகள் குருபூஜை.

13—11—76 சனி, சக்தி நாயனார் குருபூஜை.

14—11—76 ஞாயிறு, தருமை 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை.

15—11—76 திங்கள், கடைமுகம். மாயூரம், ஸ்ரீ மாயூர நாதசுவாமி ஸ்ரீ வதான்யேசுவரர் முதலியமூர்த்திகள் காவிரியில் தீர்த்தம் கொடுத்தருளல். விருச்சிகரவி. 58-38.